தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தமிழகத்தில் 22 நவீன சேமிப்புக் கிடங்குகள்: முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்தார்



**சென்னை,**

தமிழகத்தில் தலா 2 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 22 நவீன சேமிப்புக் கிடங்குகளை முதல்வர் ஜெயலலிதா கடந்த 19 ஆம் தேதியன்று திறந்து வைத்தார். தலைமைச் செயலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் விடியோ கான்ஃபரன்சிங் முறை மூலம் சேமிப்புக் கிடங்குகளை அவர் திறந்தார்.

இது குறித்து தமிழக அரசு சனிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

கோவை மாவட்டம் வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் இயற்கை வள மேலாண்மை இயக்கக அலுவலகக் கட்டடம், நுண்ணுயிரியல் துறை உயிர் உரங்கள், தரக் கட்டுப்பாடு ஆய்வகம், பன்னாட்டு மாணவர் விடுதி உள்ளிட்டவை ரூ.6.35 கோடியில் கட்டப்பட்டுள்ளன.

மேலும், கோவை மாவட்டம் ஆழியார் நகர் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் விதை சேமிப்புக் கிடங்கு, மேட்டுப்பாளையத்தில் உள்ள வன கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மாணவியர் விடுதி, கலந்தாய்வு அரங்கம் மற்றும் விருந்தினர் விடுதி, நீலகிரி மாவட்டம் கூடலூரில் வீரிய ஒட்டு நெல் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றை முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்தார்.

விவசாயிகள் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்கு கொண்டு வரும் விளைபொருள்களை பாதுகாத்து வைக்க ரூ.22 கோடியில் 22 நவீன சேமிப்புக் கிடங்கள் கட்டப்பட்டுள்ளன. தலா 2 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இந்த சேமிப்புக் கிடங்குகள், விருதுநகர், தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர், கும்பகோணம், பாபநாசம், வல்லம், அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம், திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலி, சங்கரன்கோவில், ஈரோடு மாவட்டம் கொடுமுடி, அவல்பூந்துறை, மதுரை மாவட்டம் திருமங்கலம், தேனி மற்றும் கம்பம், நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை, ராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ்.மங்கலம், விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி, தியாகதுருவம், சங்கராபுரம், வளத்தி, உளுந்தூர்பேட்டை, கடலூர் மாவட்டம் கடலூர், விருத்தாசலம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்த விளைபொருள்களை வணிகர்கள் இருப்பு வைத்து பரிவர்த்தனை செய்ய ரூ.80 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள 10 கடைகள், அரியலூர் மாவட்டம் அரியலூர், ஜெயங்கொண்டம், மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஆகிய இடங்களில் தலா ஒரு பரிவர்த்தனைக் கூடம், கலப்படமற்ற உணவுப் பொருள்கள் கிடைத்திட தேனியில் ரூ.20 லட்சத்தில் அக்மார்க் ஆய்வகம் ஆகியவற்றையும் முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்தார்.

உழவர் மையங்கள்: தமிழகத்தில் 10 மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட 10 தாலுகாக்களில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூட வளாகத்தில் உழவர் மையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.அதில், முதல் கட்டமாக திருச்சி மாவட்டம் மணச்சநல்லூரில் ரூ.1.49 கோடியில் உழவர் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு வேளாண் துறைக்கென மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் உள்ள ஆட்சியர் அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றையும் முதல்வர் ஜெயலலிதா கடந்த 19- ஆம் தேதியன்று திறந்து வைத்தார் என தமிழக அரசின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேளாண்மைத் துறைக்கு புதிய கட்டடங்கள்: ஜெயலலிதா





**சென்னை,**

தலைமைச் செயலகத்தில் கடந்த 19 ஆம் தேதியன்று விடியோ கான்ஃபரன்சிங் முறை மூலம் கோவை மாவட்டம் வேளாண் பல்கலைக்கழக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள பல்வேறு அலுவலகங்களின் கட்டடங்களை திறந்து வைத்த முதல்வர் ஜெயலலிதா.

தலைமைச் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் தாமோதரன், துறையின் செயலாளர் சந்தீப் சக்சேனா, வேளாண்மை இயக்குநர் எம்.ராஜேந்திரன், வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத் துறை இயக்குநர் அனில் மேஷ்ராம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கு.ராமசாமி.

வேளாண்மைத் துறையின் பல்வேறு பிரிவுகளுக்கு புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கு முதல்வர் ஜெயலலிதா அடிக்கல் நாட்டினார்.தலைமைச் செயலகத்தில்

கடந்த 19 ஆம் தேதியன்று விடியோ கான்ஃபரன்சிங் முறை மூலம் புதிய கட்டடங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

இது குறித்து, தமிழக அரசு சனிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்திலுள்ள நாவலூர்குட்டப்பட்டு மகளிர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திலும், கோவை மாவட்டம் கிணத்துக்கடவிலும் தலா ரூ.1.10 கோடியில் உணவு பதப்படுத்தும் தொழில் முனைப்பு மையம் மற்றும் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

கோவை மாவட்டம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவியர் விடுதிக்கான கூடுதல் கட்டடம், கூடுதல் விரிவுரை அரங்கம், பட்டு வளர்ப்புத் துறையில் அலுவலகம் மற்றும் வகுப்பறை, வேளாண்மை காலநிலை ஆராய்ச்சி மையத்தில் வகுப்பறை-ஆய்வுக் கூடம், தூத்துக்குடி மாவட்டம் கிள்ளிகுளத்தில் உள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கலையரங்கம், தேனி மாவட்டம் பெரியகுளத்தில் தோட்டக்கலைக் கல்லூரிக்கு புதிய அலுவலகக் கட்டடம், ராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களில் வேளாண் அறிவியல் நிலையங்களுக்கு புதிய நிர்வாகக் கட்டடங்கள், திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் ஆராய்ச்சி நிலையத்தில் விரிவுரை அரங்கம், கடலூர் மாவட்டத்தில் உள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையம், பாலூரில் காய்கறி ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றுக்கு புதிய கட்டடங்கள், திருச்சி மாவட்டம் குமுளூர் வேளாண் பொறியியல் கல்லூரி-ஆராய்ச்சி நிலையத்துக்கு கூடுதல் கட்டடம், புதுக்கோட்டை மாவட்டம் வம்பன் தேசிய பயறு வகை ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகள் விடுதி கட்டடம் ஆகியவற்றுக்கு முதல்வர் ஜெயலலிதா அடிக்கல் நாட்டினார்.

## சூரிய சக்தியில் இயங்கும் பம்பு செட்கள்

**சென்னை,**

சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை மானியத்தில் வழங்கும் திட்டத்தை முதல்வர் ஜெயலலிதா கடந்த 19 ஆம் தேதி தொடங்கி வைத்தார். தலைமைச் செயலகத்தில் இதற்கான நிகழ்ச்சி நடைபெற்றது.

இதுகுறித்து, தமிழக அரசு சனிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

வேளாண் பாசனத்துக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கவும், அதனுடன் நுண்ணீர் பாசன அமைப்புகளை இணைத்தும் ஒரு புதிய திட்டம் ரூ.100 கோடியில் செயல்படுத்தப்படும் என்று சட்டப் பேரவையில் முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

அதன்படி, சாயும் வசதி கொண்ட சூரிய சக்தி மூலம் இயங்கும் விவசாய பம்புசெட் அமைப்புகளை நுண்ணீர் பாசன அமைப்புடன் இணைத்துச் செயல்படுத்தும் திட்டத்தை முதல்வர் தொடங்கி வைத்துள்ளார். மேலும், நான்கு விவசாயிகளுக்கு விவசாய பம்பு செட்டுகள் வாங்குவதற்கான உத்தரவுகளையும் அவர் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், வேளாண்மைத் துறை அமைச்சர் தாமோதரன், தலைமைச் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

**புதிய பயிர் காப்பீட்டுத் திட்டம்: விவசாயிகளுக்கு விளக்கம்**

**திருவள்ளூர்,**

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகளுக்கு புதிய பயிர் காப்பீட்டுத் திட்டம் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் விவசாயிகள் , தங்களது குறைகளை மனுக்களாக அளித்தனர். மேலும் ஏரி, குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளும் முன் வைக்கப்பட்டன. இதில் விவசாயிகளுக்கு பயிர் விளைச்சல் போட்டியின் விவரங்கள் குறித்து ஆவணப்படம் மூலம் விளக்கிக் காண்பிக்கப்பட்டது. மேலும் மாநில அளவில் நடைபெறும் பயிர் விளைச்சல் போட்டியில் திருவள்ளூர் மாவட்டம் முதல் பரிசு பெற முழு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டார். இதனைத்தொடர்ந்து மத்திய அரசு சார்பு நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியின் மூலமாக கடன் பெறாத விவசாயிகளுக்கு காப்பீட்டுத்

தொகை வழங்குவது தொடர்பான புதிய பயிர் காப்பீட்டுத் திட்டம் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

மாவட்டத்தில் சாலைப் பழுதுகளை நீக்க நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார். வேளாண்மை இணை இயக்குநர் சுந்தர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சுப்பிரமணியன், திருவள்ளூர் கோட்டாட்சியர் அபிராமி, பொன்னேரி கோட்டாட்சியர் மேனுவல்ராஜ், அம்பத்தூர் கோட்டாட்சியர் மாரிமுத்து உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

**கால்நடை வளர்ப்பு இலவச பயிற்சி**

**மதுரை,**

மதுரை திருப்பரங்குன்றம் தியாகராாசர் பொறியியல் கல்லூரி சாலையில் அமைந்துள்ள கால்நடை அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், பிப்ரவரி 25ஆம் தேதி முதல் 3 நாள்களுக்கு இலவச கால்நடை வளர்ப்புப் பயிற்சிகள் நடைபெற உள்ளன.

பிப்ரவரி 25ஆம் தேதி ஆடு வளர்ப்பு குறித்தும், பிப்ரவரி 26ஆம் தேதி கோழி மற்றும் காடை வளர்ப்பு குறித்தும், பிப்ரவரி 27ஆம் தேதி முயல் வளர்ப்பு குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆர்வமுள்ள கால்நடை விவசாயிகள், சுயதொழில் துவங்க ஆர்வமுள்ள இளைஞர்கள், இளம்பெண்கள் இப்பயிற்சியில் கலந்து கொள்ளலாம்.

ஆர்வமுடையவர்கள் தங்களது பெயரை நேரிலோ அல்லது தொலைபேசியில் 0452-2483903 என்ற எண்ணிலோ தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவேண்டும், என கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் பா. முருகானந்தன் தெரிவித்துள்ளார்.

**இயற்கை விவசாய பயிற்சி அளிக்க வேண்டும் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை**

**திண்டுக்கல்,**

இயற்கை விவசாயம் செய்வதற்கு பயிற்சி அளிக்க வேண்டும் என குறைதீர் கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாசலம் தலைமை வகித்தார். வேளாண்மை இணை இயக்குநர் சம்பத்குமார் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் நடைபெற்ற விவாதம்:

திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் வறட்சி ஏற்பட்டுள்ளதால், விவசாயிகளுக்கு தனிநபர் கடன் வழங்க வேண்டும். ஒட்டன்சத்திரத்தில் வேளாண்மை விற்பனை குழு மூலம் இடைத்தரகர்கள் இல்லாமல் உற்பத்தி பொருள்களை விற்பனை செய்வதற்கு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

வேளாண்மைத்துறை அதிகாரிகள் அளித்த பதில்: தனிநபர்களுக்கு வங்கிகளில் கடன் வழங்கப்படுவதில்லை. எனவே குழுவாக சேர்ந்து பயன்பெறலாம். ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் இடைத்தரகர்கள் இல்லாமல் உற்பத்தி பொருள்களை கொள்முதல் செய்வதற்கு 15 நாள்களில் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஸ்ரீராமபுரம் பகுதியில் செயல்பட்டு வரும் மோர் மிளகாய் தொழிலால், வேளாண்மை நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. அங்குள்ள கழிவுகள் சாலையோரங்களிலும், விளை நிலங்களிலும் கொட்டப்படுகிறது. இதனை தடுத்து நிறுத்தி விவசாய நிலங்களை பாதுகாக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

அதற்கு பதில் அளித்த ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மு.ச.பாண்டியராஜன், மிளகாய் தொழில் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இருப்பினும் மாசுக்கட்டுபாட்டு வாரிய அதிகாரிகள் மூலம் பொதுமக்களுக்கும், வேளாண்மை நிலங்களுக்கும் பாதிப்பில்லாத இடங்களில் கழிவுகளை கொட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

பரப்பலாறு அணை பகுதியில் வண்டல் மண் அள்ளுவதற்கு விவசாயிகளுக்கு அனுமதி அளிக்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது.

அதற்கு அதிகாரிகள் அளித்த பதில்:

பரப்பலாறு அணையை அரசு நிதியை மட்டுமே பயன்படுத்தி தூர்வார முடியாது. விவசாயிகள் வண்டல் மண் எடுப்பதால், அணையும் தூர்வாரப்படும். வனத்துறைக்கு சொந்தமான நிலத்தின் வழியாக வாகனங்களை இயக்க வேண்டியிருக்கிறது. வனத்துறையிடம் பேசி விரைவில் அனுமதி வழங்கப்படும்.

ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து இல்லாமல், இயற்கை உரங்களை பயன்படுத்தி சாகுபடி செய்யும் இயற்கை விவசாயம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என கூட்டத்தில் கோரிக்கை வைக்கப்பட்டது.

அதற்கு பதில் அளித்த அதிகாரிகள், இயற்கை விவசாயம் மேற்கொள்ள விருப்பமுள்ள விவசாயிகள், மாவட்ட வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொண்டால், பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தனர்.

வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் பொருளீட்டுக் கடனாக 3 விவசாயிகளுக்கு ரூ.4.13 லட்சம் வழங்கப்பட்டது.

கூட்டத்தில் செயற்பொறியாளர் நாங்காஞ்சியார் செந்தில்வேல், ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) டி.கார்த்திகேயன், துணை இயக்குநர்(மாநில வேளாண்மை) எம்.தங்கச்சாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கொடைக்கானலில் பண்ணைப் பள்ளி வயல் விழா**

**கொடைக்கானல்,**

கொடைக்கானலில் அட்மா திட்டத்தின் கீழ் சாகுபடி செய்யப்பட்ட பட்டர் பீன்ஸ், பட்டாணி, உருளைக்கிழங்கு அறுவடை செய்யும் பகுதிகளில் தோட்டக்கலைத்துறை சார்பில் பண்ணை பள்ளி வயல் விழா நடைபெற்றது.

செண்பகனூரில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு தோட்டக் கலைத் துறை துணை இயக்குநர்சின்னராஜ் தலைமை வகித்துப் பேசினார். உதவி இயக்குநர் பாண்டி, தோட்டக் கலைத் துறை சார்பில் வழங்கும் திட்டங்கள் குறித்துப் பேசினார். தோட்டக் கலைத் துறை ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் சதீஸ் பட்டர்பீன்ஸில் தொழில் நுட்பங்கள் குறித்தும், விளைச்சல் குறித்தும்

பேசினார்.நிகழ்ச்சியில் கொடைக்கானல், தைக்கால், செண்பகனூர், இருதயபுரம், அட்டக்கடி ஆகியப் பகுதிகளைச் சேர்ந்த 30 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். திட்ட மேலாளர் கார்த்திக் நன்றி கூறினார்.

**வைகை- பெரியாறு பிரதான கால்வாய் விவசாயிகள் சங்கத் தேர்தல்**

**வத்தலகுண்டு,**

திண்டுக்கல் மாவட்டம் வைகை, பெரியாறு பிரதான கால்வாய் வடகரை வாய்க்கால் மற்றும் மதுரை மாவட்ட கருப்பட்டி கண்மாய் நீரை பயன்படுத்துவோர் விவசாய சங்கத் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் பட்டதாரி விவசாயிகள் மொத்தம் 1178 பேர் உள்ளனர். 1930 ஏக்கர் நிலம் நேரடி பாசன வசதி பெறுகிறது. இந்த பாசன வசதிகளை பயன்படுத்தும் நபர்கள் இந்த சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் ஏற்கனவே தலைவராக இருந்து வந்த சாகுல்அமீது இறந்ததை அடுத்து இந்த சங்கத் தலைவருக்கான இடைத்தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் கருப்பட்டியைச் சேர்ந்த அப்பாஸ், இரும்பாடியை சேர்ந்த செந்தில்குமார், விளாம்பட்டியை சேர்ந்த முத்துமாயன் ஆகிய மூவரும் போட்டியிட்டனர்.

இந்தத் தேர்தலுக்கான வாக்குச் சாவடிகள் குருவித்துறை, இரும்பாடி, கருப்பட்டி, விளாம்பட்டி ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டு இருந்தன. காலையில் இருந்தே விறுவிறுப்பான வாக்குப் பதிவு நடைபெற்றது. இதில் தேர்தல் அதிகாரியாக மதுரை மண்டல துணை வட்டாட்சியர் மலர்விழி மற்றும் பேரணை மதகணை பிரிவின் இளம்பொறியாளர் தண்டபாணி ஆகியோர் செயல்பட்டனர். வாக்காளர்கள் வரிசையில் நின்று வாக்களித்தனர். இதில் பெண்களும் அடங்குவர். 1178 வாக்காளர்கள் ஓட்டுப் போட்டனர். இந்தத் தேர்தல் 2003 நீர்பகிர் சட்டத்தின் கீழ் நடத்தப்படுகிறது. இதுவரை 3 தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. தற்போது நடைபெற்றது இடைத்தேர்தல் ஆகும். மாலை 4 மணிவரை வாக்குப் பதிவு நடைபெற்றது.

பின்பு அனைத்து சாவடிகளிலும் இருந்து கொண்டு வரப்பட்ட வாக்கு பெட்டிகள் வாடிப்பட்டி தாலுகா அலுவலகத்தில் வைக்கப்பட்டன. பின்னர் வாக்குகள் எண்ணப்பட்டன. இதில் அதிக வாக்குகளை பெற்று கருப்பட்டியைச் சேர்ந்த

அப்பாஸ் வெற்றி பெற்றுள்ளார் என அறிவித்துள்ளனர். இதன்மூலம் பெரியாறு பிரதான கால்வாய் வடகரை வாய்க்கால் மற்றும் கருப்பட்டி கண்மாய் நீரை பயன்படுத்துவோர் சங்கத்துக்கு புதிய தலைவராக அப்பாஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**மானாமதுரை, திருப்புவனம் பகுதியில் கடும்வறட்சி: கருகும் தென்னை மரங்கள்**

**மானாமதுரை,**

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை, திருப்புவனம் பகுதியில் கடும் வறட்சி காரணமாக தென்னை மரங்கள் கருகி வருகின்றன.

மானாமதுரை, திருப்புவனம் பகுதியில் வைகைக் கரையோரம் ஏராளமான விவசாயிகள் பல ஏக்கரில் தென்னை சாகுபடி செய்துள்ளனர். கடந்த மூன்று ஆண்டுகளாக பருவமழை இல்லாதது, வைகையில் தொடர்ந்து தண்ணீர் வராததால் கிணறுகளில் நீர்மட்டம் குறைந்தது. இதனால் கடும் வறட்சி நிலவுகிறது. நெல் பயிர்கள் கருகியதால் அதை அறுவடை செய்ய விரும்பாத விவசாயிகள் அப்படியே விட்டுவிட்டனர்.வறட்சி காரணமாக பல ஏக்கரில் தென்னை மரங்கள் பட்டுப்போய் நிற்கின்றன.

**பிப்.26 விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

**சிவகங்கை,**

பிப்.27ஆம் தேதி நடைபெறுவதாக இருந்த விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நிர்வாக காரணங்களுக்காக பிப்.26ஆம் தேதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**மார்ச் 1 முதல் காணை நோய் தடுப்பூசி: ஆட்சியர்**

**சிவகங்கை,**

சிவகங்கை மாவட்டத்தில் 6ஆவது சுற்றாக மார்ச் 1ஆம் தேதி முதல் 2.35 லட்சம்

மாடுகளுக்கு காணை நோய் தடுப்பூசி போடப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

காணை என அழைக்கப்படும் கோமாரி நோய் தாக்கத்தை தடுப்பதற்காகவும், அதனால் ஏற்படும் பொருளாதார இழப்பினை தவிர்ப்பதற்காகவும் கோமாரி தடுப்புத் திட்டத்தின் கீழ் 6ஆவது சுற்றாக மாவட்டத்தில் 2.35 லட்சம் மாடுகளுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காணை நோய் தடுப்பூசி போட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அனைத்து கிராமங்களிலும் கால்நடை குழுக்கள் மூலம் வரும் மார்ச் 1ஆம் தேதி முதல் போடப்பட உள்ளது. மாடுகளை வளர்ப்போர் தவறாமல் இந்த ஊசியினை தங்களது மாடுகளுக்கு போட்டுக் கொள்ள வேண்டும் என ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கால்நடை பராமரிப்புத் துறை மூலம் வைக்கோல் விற்பனை: ஆட்சியர் ஆய்வு

**சிவகங்கை,**

சிவகங்கை மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை மூலம் வைக்கோல் விற்பனை செய்யப்படுவதை மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் சனிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சிவகங்கை, காளையார்கோவில், திருப்பத்தூர், தேவகோட்டை ஆகிய நான்கு கால்நடை மருந்தகங்களில் கால்நடைகளுக்குத் தேவையான உலர் தீவன பற்றாக்குறையை போக்குவதற்காக அரசு விதை பண்ணைகளிலிருந்து வைக்கோல் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு விற்பனை மையமும் தலா ரூ.10 லட்சம் வரை வைக்கோல் கொள்முதல் செய்யலாம். கொள்முதல் செய்யப்பட்ட வைக்கோல் விற்பனையானதும் அந்தத் தொகையைக் கொண்டு மீண்டும் வைக்கோல் கொள்முதல் செய்து விற்பனை செய்யப்படும். கால்நடை வைத்திருப்பவர்கள் அந்தந்த பகுதி விற்பனை மையங்களுக்கு;க் சென்று அதற்கான அட்டையில் பதிவு செய்து ஒரு கிலோ வைக்கோல் ரூ.2வீதம் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு முறையும் வைக்கோல் பெறுவதற்கு அட்டையைக் கொண்டு வரவேண்டும்.

வைக்கோல் விற்பனையில் எவ்வித முறைகேடும் இன்றி அதற்கான அட்டையில் உரிய பதிவு மேற்கொள்ளப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட அளவில் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளதாக ஆட்சியர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் (பொ) நாகராஜன், உதவி இயக்குநர்கள் கருணாகரன், பாலச்சந்திரன், சோமசுந்தரம், உதவி மருத்துவர்கள் பாலகிருஷ்ணன், ரமேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

## காப்பீட்டு திட்டம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வலியுறுத்தல் விருதுநகர்,

விருதுநகர் மாவட்டத்தில் வறட்சிக் காலத்தில் விவசாயிகள் பயனடையும் வகையில் காப்பீட்டு திட்டம் குறித்து வேளாண்மை மற்றும் கூட்டுறவு விவசாய வங்கிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கோரிக்கை விடுத்தனர்.

விருதுநகர் மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் வெள்ளிக்கிழமை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் டி.என்.ஹரிஹரன் தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் சுப்பையா முன்னிலை வகித்தார். கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு: விருதுநகர் மாவட்டத்தில் தென்மாநில பசுமை தீர்ப்பாயம் தனியார்கள் குடிநீர் எடுத்து விற்பனை செய்வதை தடைசெய்துள்ளது. அதை உடனே இம்மாவட்டத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

விவசாயிகள் வறட்சி காலங்களில் காப்பீட்டு திட்டம் மூலம் பயனடையும் வகையில் வேளாண்மை, கூட்டுறவு வங்கிகள் மூலம் கிராமங்கள் தோறும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். பிப்.24-ஆம் தேதியுடன் முடிவடையும் காப்பீடு செய்வதற்கானகாலக்கெடுவை நீட்டிக்க வேண்டும்.

இத்திட்டத்தில் பங்கேற்றோருக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் இழப்பீட்டுத் தொகை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இம்மாவட்டத்தை வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவித்து வறட்சி நிவாரணமும் வழங்க வேண்டும். அதேபோல், கடந்தாண்டு வந்த வறட்சி நிவாரண உதவித் தொகை சரியான ஆவணங்கள் மற்றும் பட்டா எண் தவறு போன்ற காரணங்களால் விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் கூட்டுறவு வேளாண்மை வங்கிகளில் ரூ.7 கோடி வரையில் உள்ளது.

இதை திருப்பி அனுப்பாமல், இத்தொகை கிடைக்காத விவசாயிகளுக்கு சரிபார்த்து வழங்கினால் விவசாயிகள் பயனடைவார்கள். தற்போது, கால்நடைகளுக்கு தீவனம் கிடைப்பதில் சிக்கல் இருக்கிறது. எனவே அரசு ஒவ்வொரு வட்டாரப் பகுதியிலும் தீவன நிலையங்களை தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் விலங்குகளால் சேதமடைந்த விளைபயிர்கள், தென்னை மரங்கள், மாமரங்கள் ஆகியவைகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இதற்கு பதிலளித்து ஆட்சியர் பேசுகையில், காப்பீட்டு திட்டம் குறித்து அந்தந்த வேளாண்மை வங்கிகள், வட்டார வேளாண்மை வளர்ச்சி அலுவலகம் மூலம் ஒவ்வொரு கிராமங்களுக்கும் நேரடியாகச் சென்று அலுவலர்களால் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.கால்நடை தீவனம் வழங்குவதற்கு விருதுநகர், அருப்புக்கோட்டை, காரியாபட்டி, சாத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் தீவன மையங்கள் தொடங்கப்பட இருக்கிறது. அதேபோல், ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையத்திலும் தொடங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். விலங்குகளால் பாதிக்கப்படும் விளைபயிர்கள் மற்றும் மனித சேதாரங்களுக்குரிய நிவாரண தொகை உரிய நேரத்தில் வழங்க அலுவலர்களை கேட்டுக் கொண்டார்.

வறட்சி மாவட்டமாக அறிவிக்க மாவட்ட நிர்வாகம் மூலம் அரசுக்கு பரிந்துரை செய்யப்படும். ஏற்கெனவே வந்த வறட்சி நிவாரண தொகை பெறாத விவசாயிகளுக்கு வழங்குவது குறித்து அரசுக்கு விவரம் எடுத்துரைக்கப்படும் என ஆட்சியர் தெரிவித்தார். இக்கூட்டத்தில் கோட்டாட்சியர் உதயகுமார் (அருப்புக்கோட்டை), கீர்த்திகா பிரியதர்ஷினி (சிவகாசி), வனத்துறை கோட்ட அலுவலர் அசோக்குமார், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் நவாஸ்கான்,

வேளாண்மை துறை துணை இயக்குநர்கள் மற்றும் விவசாயிகள் சங்கத்தின் நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**57 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்கள் வழங்கல்**

**சாத்தூர்,**

சாத்தூர் அருகே 157 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்கள் வழங்கப்பட்டன.

சாத்தூர் தொகுதிகுட்பட்ட வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள சங்கரபாண்டியாபுரம் துவக்கப் பள்ளியில் விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் விழா சனிக்கிழமை நடைபெற்றது. கால்நடைத் துறை சார்பில் நடைபெற்ற இந்த விழாவில் மாவட்ட ஆட்சியர் டி.என். ஹரிஹரன் தலைமை வகித்தார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுதுறை அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சங்கரபாண்டியாபுரம், ஜெகவீரன்பட்டி உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த 157 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்களை வழங்கினார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் முனுசாமி, சிவகாசி கோட்டாட்சியர் கீர்த்திபிரியதர்ஷிணி, சாத்தூர் வட்டாட்சியர் அன்னலட்சுமி, வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியத் தலைவர் ரேவதி காசி துரைபாண்டியன், சாத்தூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் வேலாயுதம், திட்டக்குழு உறுப்பினர் வாசன், தொகுதி இணைச் செயலாளர் முனீஸ் மற்றும் கால்நடைத் துறை அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**கிராம சபைக் கூட்டத்தில் கோமாரி நோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த உத்தரவு**

**விருதுநகர்,**

கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு பற்றி பிப். 25-ஆம் தேதி கிராம சபைக் கூட்டம் நடத்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என ஆட்சியர் டி.என். ஹரிஹரன் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு விவரம்: கிராமங்களில் கோமாரி நோய் தாக்கி ஆடுகள், கறவை மாடுகள் ஆகியவை உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதோடு, தடுப்பு நோய் திட்டத்தின் கீழ் கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி அவசியம் போட வேண்டும். இது தொடர்பாக கால்நடை வளர்ப்போருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் குறிப்பிட்ட நாளில் கிராம சபைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும். அதையடுத்து மார்ச் 1-ஆம் தேதி தொடங்கி, 21ஆம் தேதி வரையில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கால்நடை பராமரிப்பு மருத்துவக் குழுவினர் தடுப்பூசி போடவும் உள்ளனர்.

இந்த முகாமில் கால்நடைக்குச் சொந்தக்காரர்கள் மற்றும் ஆடு, மாடுகள் வளர்க்கும் விவசாயிகள் ஆகியோர் பங்கேற்று தடுப்பூசி போட்டு பயனடையுமாறு ஆட்சியர் டி.என். ஹரிஹரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**அ.தி.மு.க. ஆட்சிக் காலம் விவசாயிகளின் பொற்காலம்**

**பொள்ளாச்சி,**

ஜெயலலிதா முதல்வராக தமிழகத்தை ஆட்சி செய்யும் காலம் விவசாயிகளின் பொற்காலம் என்று வேளாண் துறை அமைச்சர் தாமோதரன் தெரிவித்தார்.

கோவை மாவட்டம், பொள்ளாச்சியை அடுத்த திப்பம்பட்டியில் இளநீர் வணிக வளாகம் கட்டுமான பணி துவக்க விழா சனிக்கிழமை நடைபெற்றது. வேளாண் துறை அமைச்சர் தாமோதரன், சட்டப்பேரவை துணைத் தலைவர் ஜெயராமன் ஆகியோர் இப்பணிக்கான பூமி பூஜையை துவங்கி வைத்தனர்.

வேளாண் துறை இயக்குநர் அனில்மேஸ்ரா, மாவட்ட ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக், பொள்ளாச்சி சப்-கலெக்டர் ரேஷ்மி சித்தார்த் ஜெகடே, கேபிள் டிவி வாரியத் தலைவர் ராதாகிருஷ்ணன், எம்எல்ஏக்கள் முத்துகருப்பண்ணசாமி, சண்முகசுந்தரம் ஆகியோர் பங்கேற்றனர்.

பொள்ளாச்சி பகுதியில் இளநீர் வணிக வளாகம் அமைக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்ற தமிழக முதல்வர் அப்பணிக்காக ரூ. 3.25 கோடி ஒதுக்கிடு செய்தார்.

இதையடுத்து, இளநீர் வணிக வளாகம் கட்ட பொள்ளாச்சி அடுத்த திப்பம்பட்டி தேர்வு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிக்கான பூமி பூஜை சனிக்கிழமை நடைபெற்றது. இதில், திரளான விவசாயிகள் கலந்துகொண்டு முதல்வருக்கு நன்றி தெரிவித்தனர்.

இவ்விழாவில், சட்டப்பேரவை துணைத் தலைவர் ஜெயராமன் பேசியது:

இளநீர் வணிக வளாகம் அமைக்க ரூ. 3.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் துவங்கப்பட்டுள்ளன. விரைவில் இளநீர் பதப்படுத்தும் வசதிகள் செய்யவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. பி.ஏ.பி. திட்டத்தில் உள்ள விவசாய நிலங்கள் அனைத்தையும், இஸ்ரேல் சொட்டு நீர்ப் பாசன முறைக்கு மாற்றவேண்டும் என்றார்.

வேளாண் அமைச்சர் தாமோதரன் பேசியது:

தென்னை விவசாயத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த பொள்ளாச்சியில் தேங்காய், இளநீர் உற்பத்தி செய்யும் விவசாயிகளைவிட இடைத் தரகர்களே அதிக லாபம் சம்பாதிக்கின்றனர். விவசாயிகளின் லாபத்தை அதிகப்படுத்தவே திப்பம்பட்டியில் இளநீர் வணிக வளாகம் அமைக்கப்படுகிறது. கிணத்துக்கடவு பகுதியில் தக்காளி விவசாயம் அதிகம் உள்ளதால் 500 மெட்ரிக் டன் அளவில் குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் பணியும் நடைபெற்றுவருகிறது. மொத்தத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் ஆட்சிக்காலம் விவசாயிகளின் பொற்காலமாக உள்ளது என்றார்.

இவ்விழாவில், 34 பயனாளிகளுக்கு மானியம், கடன் தொகை, பம்ப்செட் மற்றும் இடுபொருள்கள் வழங்கப்பட்டன.

## வேளாண் பல்கலை.யில்சிறுதானியங்களின் உற்பத்தி மதிப்புக் கூட்டுதல் பயிற்சி

**கோவை,**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சிறுதானியங்களின் உற்பத்தி மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்கான இரு நாள் பயிற்சி பிப்ரவரி 27 ஆம் தேதி தொடங்குகிறது.

இந்தப் பயிற்சியில் சிறுதானியங்களின் உற்பத்தித் திறனை பெருக்குவதற்கான தொழில்நுட்பங்கள் மற்றும் சிறுதானியங்களில் மதிப்பு கூட்டுதலுக்கான

தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி, சிறுதானியங்கள் பயிரிடுவோர் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கும் அளிக்கப்பட உள்ளது.

இப் பயிற்சியில் கலந்து கொள்ள கட்டணம் எதுவும் செலுத்த தேவையில்லை. பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர், பேராசிரியர் மற்றும் தலைவர்,

சிறுதானியங்கள் துறை, தமிழ்நாடு

வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை-3 என்ற முகவரியிலோ அல்லது 0422-2450507 என்ற தொலைபேசியிலோ அல்லது ம்ண்ப்ப்ங்ற்ள்ஃற்ய்ஹன்.ஹஞ்.ண்ய் என்ற மின்னஞ்சல் மூலமாக தொடர்பு கொள்ளலாம்.

## வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தில் ரூ. 35 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

**பெருந்துறை,**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நடைபெற்ற ஏலத்தில் ரூ. 35 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் போனது.

இங்கு வாரந்தோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் கொப்பரை ஏலம் நடைபெறுகிறது. சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு, பெருந்துறை மற்றும் சுற்றுப் பகுதி விவசாயிகள், 823 மூட்டைகளில், 40 ஆயிரம் கிலோ கொப்பரையை கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தர கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ. 89.35 க்கும், அதிகபட்சமாக ரூ. 90.60 க்கும் விற்பனையானது.

இரண்டாம் தர கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ. 62.60-க்கும், அதிகபட்சமாக ரூ. 87.75-க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.35 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் மூலமாக விற்பனையானது.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 43.78 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 43.78 அடியாக இருந்தது.அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு

விநாடிக்கு 570 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 3.11 டி.எம்.சி.

**ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் தேர்வு**

**ஆற்காடு,**

முள்ளுவாடி ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் சனிக்கிழமை போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்.

ஆற்காடு தாலுகா முள்ளுவாடி, கிளாந்தாங்கல், கடப்பந்தாங்கல் ஆகிய கிராமங்களின் ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் பதவிக்கு கடந்த 13ம் தேதி மனு தாக்கல் தொடங்கியது. இதில் முள்ளுவாடி கிராமத்தைச் சேர்ந்த பச்சையப்பன் மட்டுமே மனு தாக்கல் செய்ததால் அவர் போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டார். அவருக்கு தனித்துணை ஆட்சியர் (நிலம் எடுப்புப் பிரிவு) ஐ. வளர்மதி ஆற்காடு வட்டாட்சியர் பட்டுரோஜா ஆகியோர் சனிக்கிழமை சான்றிதழ் வழங்கினர் . நிகழ்ச்சியில் புதுப்பாடி வருவாய் ஆய்வாளர் சுரேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கூட்டுறவு சங்கத்தில் கடன் வழங்கும் விழா**

**செய்யாறு,**

செய்யாறை அடுத்த காழியூர் புளியரம்பாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் கடன் வழங்கும் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சங்கக் கட்டடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு துணைத் தலைவர் கே.ஜெயராமன் முன்னிலை வகித்தார்.

தலைமை தாங்கிய ஆர்.உமா காழியூர் ரோஜா மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு ரூ.2.37 லட்சமும், புளியரம்பாக்கம் வெற்றிப் படிகள் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு ரூ.1 லட்சமும், தனி நபர் கடனாக ஆடு வளர்க்க விண்ணவாடி கிராமத்தில் 8 பேருக்கும், பெருங்களத்தூரில் ஒருவருக்கும், புளியரம்பாக்கத்தில் ஒருவருக்கும் என 10 பேருக்கு ரூ.4.6 லட்சமும் கடன் உதவிகளை வழங்கினார்.

சங்கச் செயலாளர் எம்.சாந்தி, திருவண்ணாமலை மாவட்ட மைய கூட்டுறவு வங்கி கள மேலாளர் ராஜா, இயக்குநர்கள் டி.தயாளன், பி.சுப்பிரமணியன், கே.பழநி ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று இருந்தனர்.

**ஏரி நீரினை பயன்படுத்துவோர் சங்கத் தலைவர்களுக்கு சான்றிதழ்கள்**

**வந்தவாசி,**

ஏரி நீரினை பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் பதவிக்கு போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு சான்றிதழ்கள் வந்தவாசி வட்டாட்சியர் அலுவலகத்தில் சனிக்கிழமை வழங்கப்பட்டன.

வந்தவாசியை அடுத்த தென்சேந்தமங்கலம், கோதண்டபுரம், எறும்பூர், சேத்துப்பட்டு ஆகிய கிராமங்களுக்கான ஏரிநீரினை பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் பதவிக்கான தேர்தல் அண்மையில் நடைபெற்றது. இதில் ஜீவகன் (தென்சேந்தமங்கலம்), மோகன்(கோதண்டபுரம்), இளங்கோவன் (எறும்பூர்), கிருஷ்ணன் (சேத்துப்பட்டு) ஆகியோர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர். இதையடுத்து தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு இதற்கான சான்றிதழ்களை செய்யாறு கோட்டாட்சியர் சாந்தா வழங்கினார்.

வட்டாட்சியர் எஸ்.ராஜலட்சுமி, துணை வட்டாட்சியர் ஜி.சேதுராமன், பொதுப்பணித்துறை கள ஒருங்கிணைப்பாளர் ஜார்ஜ் பாண்டியன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**மண்டகொளத்தூர் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கக் கூட்டம்**

**போளூர்,**

சேத்துப்பட்டு ஒன்றியத்துக்குள்பட்ட மண்டகொளத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் நிர்வாகக் குழு ஆலோசனைக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு சங்கத் தலைவர் குமார் தலைமை வகித்தார். துணைத் தலைவர் திருஞானம் முன்னிலை வகித்தார். செயலர் ராஜாமணி வரவேற்றார். கூட்டத்தில் விவசாயிகளுக்கு கிணற்றை ஆழப்படுத்த ரூ.1.20 லட்சம் வழங்குவது, கரும்பு

விவசாயிகளுக்கு ரூ.6.87 லட்சம் கடன் வழங்குவது உள்ளிட்ட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் சங்கத்துக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஜானகி வேல்முருகன், தமிழ்ச்செல்வி மருதன், குப்பு பொன்னம்பலம், சுப்பிரமணி, வெள்ளகாசி, முனியாண்டி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**இயற்கை எதிரிகளின் செயல்பாடு குறித்த வயல் விழா**

**தருமபுரி,**

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சுற்றுச்சூழல் அழுத்தத்தை தாங்கிச் செயல்படும் இயற்கை எதிரிகளின் செயல்பாடு குறித்த வயல் விழா சனிக்கிழமை நடைபெற்றது.

பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையம், பெங்களூரு தேசிய வேளாண் பூச்சிகள் ஆராய்ச்சி அமைப்பு சார்பில் நடைபெற்ற வயல் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, தொழில் நுட்பக் கையேட்டை வெளியிட்ட தில்லி வேளாண்மை புதுமை திட்ட ஒருங்கிணைப்பாளர் சுதீர் கொச்சார் பேசியது:

மேம்படுத்தப்பட்ட டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் பல ரசாயன பூச்சிக் கொல்லி மருந்துகளை தாங்கிச் செயலாற்றும் திறன் படைத்தது. ஒரு டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணி அட்டையை 16 துண்டுகளாக வெட்டி, ஹெக்டேர் பயிருக்கு 48 துண்டுகளாக்கி இலையின் அடிபாகத்திலோ அல்லது குருத்திலோ வைக்க வேண்டும். இதைப் பயன்படுத்துவதால் நுண்கொல்லி மருந்துகளைத் தெளிப்பது 50 சதம் வரை குறையும் என்றார் அவர்.

தேசிய வேளாண் பூச்சிகள் ஆராய்ச்சி அமைப்பின் இயக்குநர் ஆபிரகாம் வர்கீஸ், தோட்டக் கலைத் துறை துணை இயக்குநர் கலைச்செல்வி, திட்ட ஒருங்கிணைப்பாளர் நா.தமிழ்ச்செல்வன் உள்ளிட்டோர் பேசினர். 100-க்கும் அதிகமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை நிலைய உதவிப் பேராசிரியர்கள் பா.ச.சண்முகம், க.இந்துமதி ஆகியோர் செய்திருந்தனர்.

**தமிழகத்தில் வறட்சி நிவாரணம் முதல் முறையாக அளிப்பு**

**நாமக்கல்,**

தமிழகத்தில் வறட்சி நிவாரணம் விவசாயிகளுக்கு முதன்முறையாக அளிக்கப்பட்டது என்று தமிழக தொழில் துறை அமைச்சர் பி.தங்கமணி தெரிவித்தார்.

பள்ளிபாளையம் உழவர் பணி கூட்டுறவுச் சங்கத்தில் விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகை வழங்கும் விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதற்கு மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தலைமை வகித்தார்.

வருவாய்க் கோட்டாட்சியர் தா.செங்கோட்டையன், பள்ளிபாளையம் ஒன்றியக் குழுத் தலைவர் எஸ்.செந்தில், கூட்டுறவுச் சங்கத் தலைவர் பி.என்.கந்தசாமி, நகர்மன்றத் தலைவர் வெள்ளியங்கிரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழகத் தொழில் துறை அமைச்சர் பி.தங்கமணி, 25 விவசாயிகளுக்கு ரூ.8,18,982 பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகைக்கான காசோலையை வழங்கிப் பேசியது:

புயல், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மட்டுமே நிவாரணம் வழங்கப்படும் நிலையில், தமிழகத்திலேயே முதன்முறையாக வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டது. அந்த வகையில், கடந்தாண்டு நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் வறட்சி நிவாரணமாக ரூ.55 கோடி வழங்கப்பட்டது.

குறிப்பிட்ட காலத்துக்குள் கடனைத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வட்டியில்லா கடன் வழங்கிட கடந்த நிதிநிலை அறிக்கையில் ரூ.5000 கோடி நிதியை ஒதுக்கி தமிழக முதல்வர் உத்தரவிட்டார். மேட்டூரில் உரிய காலத்துக்குள்ளாக தண்ணீர் திறக்கப்பட்டதன் காரணமாக விவசாயிகள் அதிகப்படியான அளவு நெல் உற்பத்தி செய்துள்ளனர்.

மேட்டூர் இடதுகரை கால்வாயிலிருந்து பாசன வசதி பெறும் பள்ளிபாளையம் பகுதியில் நீர் சேமிப்பை அதிகப்படுத்திட பல்வேறு தடுப்பணைகள் அமைக்கப்பட்டுள்ளன. மழைக் காலங்களில் மழைநீரை சேகரிக்கவும் தடுப்பணை கட்டித் தர வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையை தமிழக முதல்வரின்

கவனத்துக்கு கொண்டு சென்று நிறைவேற்றித் தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர் அருளரசு, பள்ளிபாளையம் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆறுமுகம், துணைத் தலைவர் தனசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கோடையில் 32,000 மெட்ரிக் டன் உணவு உற்பத்தி இலக்கு

**நாமக்கல்,**

கோடைப் பயிர் சாகுபடி திட்டத்தின் கீழ், நாமக்கல் மாவட்டத்தில் 32,000 மெட்ரிக் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 776 மிமீ. ஆனால், கடந்த இரு ஆண்டுகளில் சராசரி மழையளவைவிட குறைவாகவே மழை பெய்துள்ளது.

இதன்படி, 2013ஆம் ஆண்டில் சராசரி மழையளவைவிட 29 சதம் குறைந்து, 552.3 மிமீ மழையே பெய்துள்ளது. எனினும், இருக்கும் நீரைப் பயன்படுத்தி குழாய், தெளிப்புநீர், நுண்ணீர் பாசனம் ஆகியவற்றின் மூலம் அதிக பரப்பளவில் பாசனம் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், கோடைப் பயிர் சாகுபடித் திட்டம் தயார் செய்யப்பட்டு, இந்த மாவட்டத்தில் 9,200 ஹெக்டேரில் 32,000 மெட்ரிக் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்திட வேளாண்மைத் துறை சார்பில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. திட்ட இலக்கை நிறைவு செய்திட போதுமான அளவில் விதைகள், உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகளும் மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன என்று வேளாண்மைத் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி கூறியது: தமிழக முதல்வரின் உணவு தானிய இயக்கத் திட்டத்தின் கீழ், நெல், சிறுதானியம், பயறு வகை பரப்பு இலக்காக இந்த மாவட்டத்துக்கு 1.15 லட்சம் ஹெக்டேர் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

ஆனால், 1.20 லட்சம் ஹெக்டேர் சாதனை அடையப்பட்டுள்ளது.

பாசன வசதியுள்ள கிராமங்களில் சிறப்புத் திட்டமான கோடைப் பயிர் சாகுபடித் திட்டம் செயல்படுத்த இந்த மாவட்டத்தில் 9200 ஹெக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்ட இலக்கு நிறைவு செய்திட தற்போது மழையில்லாத கோடை காலத்தில் சிறு, குறு ஆதிதிராவிட விவசாயிகள் தங்கள் நிலங்களில் மாவட்ட ஊரக வளர்ச்சித் முகமையின் மூலம் பண்ணைக் குட்டைகளை இலவசமாக அமைத்துக் கொள்ளலாம்.

தவிர, தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்திக் கொள்ள மானிய விலையில் தெளிப்புநீர், நுண்ணீர் பாசனத் திட்டங்களையும் அமைத்து விவசாயிகள் பயிர் சாகுபடியை மேம்படுத்திட வேண்டும் என்றார் அவர்.

## பிப்ரவரி 25-இல் நாட்டுக் கோழி வளர்ப்புப் பயிற்சி

**நாமக்கல்,**

நாட்டுக் கோழி வளர்ப்பும், மூலிகை முதலுதவி மருத்துவமும் என்ற தலைப்பிலான இலவசப் பயிற்சி நாமக்கல்லில் செவ்வாய்க்கிழமை அளிக்கப்பட உள்ளது.

நாமக்கல் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத்தில் அன்று பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சியில் கோழிப் பண்ணையாளர்கள், கோழி வளர்ப்பவர்கள், பண்ணை அமைக்க விருப்பமுள்ள தொழில் முனைவோர் பங்கேற்கலாம்.

பங்கேற்க உள்ளவர்கள் தங்கள் பெயரை திங்கள்கிழமை மாலைக்குள் பேராசிரியர், தலைவர், கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையம், கால்நடை மருத்துவமனை வளாகம், நாமக்கல் என்ற முகவரியில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத் தலைவர் மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருச்செங்கோடு கூட்டுறவுச் சங்கத்துக்கு அதிக அளவில் விரலி ரக மஞ்சள் வரத்து

**திருச்செங்கோடு,**

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்துக்கு சனிக்கிழமை அதிக அளவிலான விரலி ரக மஞ்சள் வந்தது.

ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மஞ்சளைக் கொண்டு வந்திருந்தனர்.

இந்த மஞ்சளைக் கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய ஊர்களிலிருந்து 25-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்திருந்தனர்.

ஏலம் மூலம் ரூ.40 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனையானது. விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.6900 முதல் ரூ. 7600 வரை விற்பனையானது.

கிழங்கு ரகம் ரூ. 6200 முதல் ரூ. 6900 வரை விலைபோனது. பனங்காளி ரகம் ரூ. 11500 முதல் ரூ.12,500 வரை விற்பனையானது. பனங்காளி ரக மஞ்சளுக்கு கடந்த வாரத்தைவிட கூடுதல் விலை கிடைத்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். அவர்களுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

10 மாதப் பயிரான மஞ்சள், அனைத்து இடங்களிலும் ஒரே மாதிரி விளைவதில்லை. ஏக்கருக்கு ரூ.2 லட்சம் கிடைத்தால், செலவு ரூ. ஒரு லட்சம் ஆகிவிடும். அதனால், அதிக லாபத்தை எதிர்பார்க்க முடியாது.

இந்தப் பருவத்தில் மஞ்சளுக்கு ஓரளவு நல்ல விலை கிடைப்பதால் தப்பித்தோம் என்றார் மேட்டூரைச் சேர்ந்த விவசாயி கந்தசாமி.

இந்த வாரம் மஞ்சள் கொள்முதல் செய்ய வந்த வியாபாரிகள் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை.

### பரமத்தி வேலூர் ஏலச் சந்தையில் வாழைத்தார் விலை திடீர் வீழ்ச்சி

**பரமத்தி வேலூர்,**

பரமத்தி வேலூர் ஏலச் சந்தையில் வாழைத்தார்களின் விலை திடீர் என சரிவடைந்துள்ளாதால், வாழைத்தார் பயிர் செய்துள்ள விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பரமத்தி வேலூர் வட்டம், பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், குப்புச்சிபாளையம், நன்செய் இடையாறு, ஓலப்பாளையம், மோகனூர் உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் பல்வேறு வகையான வாழைத்தார்கள் பயிர் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் விளையும் வாழைத்தார்கள் பரமத்திவேலூாரில் நடைபெறும் வாழைத்தார் ஏலச் சந்தைக்கு கொண்டு வரப்படுகின்றன.

பல்வேறு மாவட்டங்களையும், பல்வேறு மாநிலங்களையும் சேர்ந்த வியாபாரிகள் இங்கு வந்து, வாழைத்தார்களை ஏலம் எடுத்துச் செல்கின்றனர்.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ரூ.300-க்கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ. 250-க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.200-க்கும், பச்சை லாடன் வாழைத்தார் ரூ.150-க்கும்,

மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.6-க்கும் ஏலம் போனது.

சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ரூ.200-க்கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ. 150-க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.150-க்கும், பச்சை லாடன் வாழைத்தார் ரூ.100-க்கும், மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.3-க்கும் ஏலம் போனது.

ஏலம் எடுப்பதற்கு வெளி மாவட்டங்களில் இருந்து அதிக அளவில் வியாபாரிகள் வராததாலும், பண்டிகை காலங்கள் ஏதும் அதிகம் இல்லாததாலும் வாழைத்தார் விலை சரிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். பரமத்தி வேலூர், பிப்.22: பரமத்தி வேலூர் ஏலச் சந்தையில் வாழைத்தார்களின் விலை திடீர் என சரிவடைந்துள்ளாதால், வாழைத்தார் பயிர் செய்துள்ள விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 6 கோடிக்கு பருத்தி விற்பனை**

**எடப்பாடி,**

கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனைச் சங்க ஏலச் சந்தையில் இரண்டு நாள்களாக 27,108 பருத்தி மூட்டைகள் ரூ. 6 கோடியே 2 லட்சத்து 30 ஆயிரத்துக்கு ஏலம்

போனது. ஞாயிற்றுக்கிழமை (பிப்ரவரி 23) 15 ஆயிரம் பருத்தி மூட்டைகளுக்கான ஏலம் நடைபெற உள்ளது.

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கிளை கொங்கணாபுரத்தில் உள்ளது. பருத்தி அதிகம் ஏலத்திற்கு வரக் கூடிய கூட்டுறவுச் சங்கங்களில் திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனை சங்கம் முன்னிலையில் உள்ளது. இந்த சந்தையில் ஏலத்திற்கு வரும் பருத்தியை வாங்குவதற்கு கோயமுத்தூர், அன்னூர், அவினாசி, சேலம், திருப்பூர், ஊத்தங்கரை, கோவில்பட்டி, விருதுநகர், தேனி, திண்டுக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி போன்ற பகுதிகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் ஏராளமான வியாபாரிகள் வருகின்றனர். கொங்கணாபுரம் ஏலச் சந்தையில் தரமானப் பருத்தி கிடைப்பதால், வியாபாரிகள் அதிகளவு இங்கு வருகின்றனர்.

வாரம் தோறும் வெள்ளி, சனிக்கிழமைகளில் நடைபெறும் பருத்தி ஏலத்தில் அதிக விலை கிடைப்பதால், கொங்கணாபுரத்திற்கு சுற்றுப்பகுதி விவசாயிகள் தவிர வெளி மாவட்ட விவசாயிகளும் அதிகளவு பருத்தியை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

கொங்கணாபுரம் கிளைக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வெள்ளி, சனிக்கிழமை ஆகிய இரண்டு நாள்களில் நடைபெற்ற பருத்தி ஏலத்தில், 27 ஆயிரத்து 108 பருத்தி மூட்டைகள் ஏலத்திற்கு வந்தன.

இதில், பிடி ரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 4,910 முதல் 5,620 வரையும், டிசிஎச் ரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 6,530 முதல் 7,340 வரையும் ஏலம் போனது. இரண்டு நாள்களிலும் சேர்ந்து மொத்தம் ரூ.6 கோடியே 2 லட்சத்து 30 ஆயிரக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. ஞாயிற்றுக்கிழமை(பிப்ரவரி 23) 15 ஆயிரம் பருத்தி மூட்டைகளுக்கான ஏலம் நடைபெற உள்ளதாக கூட்டுறவு விற்பனைச் சங்க அலுவலர்கள் தெரிவித்தனர்.

### செந்துறையில் கண்மாய் சீரமைப்பு

**அரியலூர்,**

அரியலூர் மாவட்டம், செந்துறை பகுதியில் தமிழ்நாடு நீர்வள, நிலவள திட்டத்தின்

கீழ் ரூ. 2 கோடியே 98 லட்சத்தில் கண்மாய் சீரமைப்புப் பணிகள் நடைபெறுகின்றன.

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், நக்கம்பாடி, நமங்குணம், குழுமூர், மணப்பத்தூர், அசாவீரன்குடிக்காடு, மணக்குடையான், அயன்தத்தனூர், குடிக்காடு, மற்றும் தளவாய் கிராமங்களில் ஆனைவாரி ஓடை உபவடிநிலப் பகுதிகளில் இந்தப் பணிகள் நடைபெறுகின்றன.

பணிகளை திருச்சி நடுக்காவிரி வடிநில வட்டக் கண்காணிப்புப் பொறியாளர் ஜேம்ஸ் லூர்துசாமி அண்மையில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மருதையாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் சீனிவாசன், உதவி செயற்பொறியாளர் தட்சிணாமூர்த்தி, உதவிப் பொறியாளர் மணிமாறன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஆரம்ப சுகாதார நிலையம், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம் திறப்பு விழா

**பெரம்பலூர்,**

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், எசனை கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி மூலம், எசனை கிராமத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தமிழக முதல்வர் அண்மையில் திறந்து வைத்தார். அதைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது குத்து விளக்கேற்றி, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாநில வேளாண் விற்பனை வாரியத் தலைவர் மா. ரவிச்சந்திரன், பெரம்பலூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் இரா. தமிழ்ச்செல்வன், பெரம்பலூர் ஒன்றியக் குழுத்தலைவர் ஆர்.பி. மருதராஜா, சுகாதாரத்துறை உதவி இயக்குநர் ராஜேந்திரன், விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்ட ஒருங்கிணைப்பாளர் அரவிந்த், ஊராட்சி தலைவர் மு.ராமதேவ், துணைத்தலைவர் சின்னசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.

இதேபோல, பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ரூ. 1.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தையும், சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து தமிழக முதல்வர் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார். அதைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சிதயர் தரேஸ் அஹமது வேளாண்மை அலுவலகத்தில் குத்து விளக்கேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர்.

இதில், நகர்மன்றத் தலைவர் சி. ரமேஷ், வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) ஆல்பிரட், வேளாண்மை பொறியியல் உதவி இயக்குநர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**உலர் தீவன கிடங்கு அமைக்க ரூ. 10 லட்சம் ஒதுக்கீடு**

**பெரம்பலூர்,**

சத்திரமனை கிராமத்தில் உலர் தீவனக் கிடங்கு அமைக்க, தமிழக அரசு ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கியுள்ளது என்றார் பெரம்பலூர் எம்எல்ஏ இரா. தமிழ்ச்செல்வன்.

பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குள்பட்ட சத்திரமனை கிராமத்தில், கால்நடை வளர்ப்போர்க்கு மானிய விலையில் உலர் தீவனம் வழங்கும் திட்டத்தை சனிக்கிழமை தொடக்கி வைத்த அவர் மேலும் பேசியது:

தமிழகத்தில் பருவ மழையில்லாத மாவட்டங்களில் சிறு, குறு விவசாயிகளின் வாழ்வாதாரமான கால்நடைகளின் தீவனப் பற்றாக்குறையைத் தவிர்க்க, உலர் வைக்கோல் தீவனத்தை மானிய விலையில் தீவன கிடங்குகளின் மூலம் வழங்க, முதல்கட்டமாக ரூ. 12.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில், கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம் வறட்சி நிவாரணத் திட்டத்தில் சத்திரமனை கிராமத்தில் உலர் தீவன கிடங்கு அமைக்க ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கு 1 கிலோ வைக்கோல் ரூ. 2 வீதம் மானிய விலையில் வழங்கப்பட உள்ளது. அதனடிப்படையில், ஒரு மாட்டுக்கு ஒரு நாளைக்கு 3 கிலோ வீதம் அதிகபட்சமாக 5 மாடுகளுக்கு வாராந்திர தேவையின் அடிப்படையில்,

வாரம் ஒரு முறை 105 கிலோ இரண்டு முதல் மூன்று மாதங்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற கால்நடை வளர்ப்போர் தங்களது குடும்ப அட்டையின் நகல், பாஸ்போர்ட் அளவு 2 போட்டோ, கால்நடைகளின் இருப்பு விவரம் ஆகியவற்றை சம்பந்தப்பட்ட கால்நடை மருந்தகங்களில் அளித்து பதிவு செய்துகொள்ள வேண்டும். பதிவு செய்தவர்களுக்கு வழங்கப்படும் அட்டை மூலம், தீவனக் கிடங்கில் மானிய விலையில் வைக்கோல் பெற்றுக்கொள்ளலாம். சத்திரமனை தீவன கிடங்கு மூலம் பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 20 ஊராட்சிகளும், 2-ம் கட்டமாக வி.களத்தூர் கால்நடை மருந்தக வளாகத்தில் அமைக்கப்படும் தீவனக் கிடங்கு மூலம் 29 கிராம ஊராட்சிகளும், கொளக்காநத்தம் கால்நடை மருந்தக வளாகத்தில் அமைக்கப்படும் தீவன கிடங்கு மூலம் 39 கிராம ஊராட்சிகளில் உள்ள கால்நடைகளும் பயன்பெற உள்ளன என்றார் அவர்.

நிகழ்ச்சியில், பெரம்பலூர் ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.பி. மருதராஜா, துணைத் தலைவர் சி. பிச்சைபிள்ளை, கால்நடைப் பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் சந்திரசேகர், உதவி இயக்குநர் மனோகரன், வேளாண் துறை இணை இயக்குநர் (பொ) ஆல்பிரட் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### 660 மரக்கன்று நடும் விழா,பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கும் விழா

**திருநெல்வேலி,**

திருநெல்வேலி அருகே ராமையன்பட்டியில் முதல்வர் ஜெயலலிதா பிறந்த தினத்தையொட்டி 660 மரக்கன்றுகள் நடும் விழா, பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கும் விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

முதல்வர் பிறந்த தினவிழா, கால்நடை வாரவிழாவை முன்னிட்டு ராமையன்பட்டி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற விழாவுக்கு நயினார்நாகேந்திரன் எம்.எல்.ஏ. தலைமை வகித்து மரக்கன்றுகள் நட்டார். பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கினார். மாநகராட்சி மேயர்(பொறுப்பு) பூ. ஜெகநாதன், மானூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் கல்லூர் இ. வேலாயுதம் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் சே.

பிரதாபன், கால்நடை மருத்துவப் பணிகள், பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கும் திட்டம் குறித்துப் பேசினார்.

660 மரக்கன்றுகள் நடப்பட்டன. பழங்குடியின உபதிட்டத்தின் கீழ் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு புளியங்குடி கிராமத்தைச் சேர்ந்த 7 குடும்பங்களுக்கு குட்டிகளுடன் கூடிய ஆடுகள் வழங்கப்பட்டன. பயிற்றுவிக்கும் கால்நடைப் பண்ணை வளாகத் தலைவர் வெ. தனசீலன் வரவேற்றார். கால்நடை உடற்கூறியல்துறைத் தலைவர் ஆ. குமரவேல் நன்றி கூறினார்.

## மார்ச் 1 முதல் 21-ம் தேதி வரை கோமாரிநோய்த் தடுப்பூசி பணி

**திருநெல்வேலி,**

திருநெல்வேலி மாவட்டத்தில், மார்ச் 1 முதல் 21 ஆம் தேதி வரை கால்நடைகளுக்கு கோமாரிநோய்த் தடுப்பூசி போடும் பணி நடைபெற உள்ளது.

இம்மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 6-வது சுற்றாக கோமாரிநோய்த் தடுப்பூசி பணி மார்ச் 1 முதல் 21-ம் தேதி வரை 21 நாள்களுக்கு தொடர்ந்து மேற்கொள்ளப்பட உள்ளது. இம் மாவட்டத்தில் உள்ள 19 ஊராட்சி ஒன்றியங்களிலும் மொத்தம் 3 லட்சத்து 24 ஆயிரத்து 556 கால்நடைகள் உள்ளன. கால்நடை பராமரிப்புத் துறையினரால் 126 குழுக்களும், ஆவின் நிறுவனத்தினரால் 5 குழுக்களும் ஏற்படுத்தப்பட்டு அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதையொட்டி ஆட்சியர் மு.கருணாகரன் தலைமையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், தடுப்பூசி பணிகள் குறித்து வருவாய்த்துறை, உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புத் தொடர்பாக விளக்கக் கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலை அருகே உள்ள பிளாரன்ஸ் ஸ்வைன்சன் காதுகேளாதோர் பள்ளியில் உள்ள அரங்கத்தில் திங்கள்கிழமை (பிப்.24) ஆட்சியர் தலைமையில் விளக்கக் கூட்டம் நடைபெற உள்ளது. இக் கூட்டத்தில் கிராம நிர்வாக அலுவலர்கள், ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சிச் செயலர்கள் பங்கேற்க உள்ளனர்.

**நெல்லையில் 4 இடங்களில் தீவனக் கிடங்குகள் இன்று திறப்பு**

**திருநெல்வேலி,**

கால்நடை வளர்ப்போர், விவசாயிகளுக்கு உதவிடும் வகையில், திருநெல்வேலி மாவட்டத்தில் 4 இடங்களில் தீவனக் கிடங்குகள் திறக்கப்படவுள்ளன.

இதுதொடர்பாக, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன் கூறியது:

வறட்சிக் காலங்களில் கால்நடைகளுக்கு ஏற்படும் தீவனத் தட்டுப்பாட்டைப் போக்க மாவட்டத்தில் 4 இடங்களில் தலா ரூ.10 லட்சம் செலவில் தீவனக் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மானூர், மேலநீலிதநல்லூர், குருவிகுளம், ராதாபுரம் ஆகிய வட்டாரத்தில் உள்ள கால்நடை மருந்தகங்களில் இந்த தீவனக் கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு பயனாளிக்கு கிலோ ரூ.2 வீதம் 21 கிலோ உலர் தீவனம் வழங்கப்படும். இந்த மையங்களில் தீவனம் வழங்கும் திட்டத்தை எம்எல்ஏ நயினார் நாகேந்திரன் ஞாயிற்றுக்கிழமை தொடங்கிவைக்கிறார். விவசாயிகளும், கால்நடை வளர்ப்போரும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சியர் அறிவுறுத்தியுள்ளார்.

**நேரடி நெல் கொள்முதல் செய்ய 80 ஆயிரம் டன் இலக்கு**

**கடலூர்,**

கடலூர் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 80 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் இதுவரை 25 ஆயிரம் டன் அளவு நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் யேசுமரி(பொறுப்பு) கூறியதாவது: கடலூர் மாவட்டத்தில் டெல்டா பகுதிகளான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் ஆகிய வட்டங்களில் 151 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் துவக்கப்பட்டன.

இந்த ஆண்டு 80 ஆயிரம் டன் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் இதுவரை சுமார் 25 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. சம்பா பருவத்தில் விவசாயிகள் சன்னரகமான பி.பி.டி. நடவு செய்ததால் அறுவடை

செய்த நெல்லை கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்யாமல் வியாபாரிகளிடம் விற்பனை செய்கின்றனர்.

இதனால் கொள்முதல் நிலையங்களில் நெல்வரத்து குறைந்துள்ளது. 36 நிலையங்களில் நெல் வரத்தே இல்லாததால் மூடும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இம்மாவட்டத்தில் 35 ஆயிரம் டன்னும், 2011-12-ல் ஒரு லட்சத்து 13 ஆயிரம் டன்னும், 2010-11ல் ஒரு லட்சத்து 20ஆயிரம் டன்னும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

நவரைப் பட்டத்தில் நடவு செய்த நெல் அறுவடையை எதிர்பார்த்துள்ளோம், விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன் பெறலாம் என்றார் அவர்.

## 28-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**கடலூர்,**

கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் வரும் 28-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

கடலூர் கடற்கரைச் சாலையில் உள்ள மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் தலைமையில் நடக்கிறது.

விவசாயிகள் தங்களது வேளாண்மை சார்ந்த குறைகளை கோரிக்கைகளாக வைக்க அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்படும். இதில் கோரிக்கைகளை தெரிவிக்கும் விவசாயிகள் காலை 10.30 மணிக்குள் தங்களது பெயர் மற்றும் கோரிக்கை வைக்கவுள்ள துறையின் பெயர் ஆகியவற்றை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

கோரிக்கைகளை எழுத்துப் பூர்வமாகவும், மனுவாகவும் வழங்கலாம்.

இக்குறைகளுக்கு சம்பந்தப்பட்ட துறையின் உயர் அலுவலர்கள் உரிய பதில் அளிக்கவும், மேலும் தொடர் நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியரால் அறிவுறுத்தப்படவும் உள்ளது.

இத் தகவல் மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபோல் கொசு மருந்து அடிக்க வேண்டும், பசுமை வீடு,

தானே வீடு ஒதுக்கீடு, தெருவிளக்கு, உதவித் தொகை, சான்று பெறுதலில் உள்ள பிரச்னைகள் குறித்து பேச அனுமதி அளிக்காமல் இருந்தால் விவசாயம் தொடர்பான பிரச்னைகளைப் பேச கூடுதல் நேரம் கிடைக்கும். இந்த நடைமுறையை செயல்படுத்த அதிகாரிகள் முன்வர வேண்டும் என விவசாய சங்க பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மலை உச்சியிலும் இயற்கை வேளாண்மை: மாட்டுச்சாணமே உரம் மலைவாழ் மக்களுக்கு வரம்**



மாட்டுச்சாணம், சாம்பல் ஆகியவற்றையே பிரதான உரமாக பயன்படுத்தி, இயற்கை வேளாண் சாகுபடியில் சாதனை படைக்கின்றனர், வால்பாறை அருகே உள்ள வாகமலை விவசாயிகள்.

கடல் மட்டத்தில் இருந்து 3,500 அடி உயரத்திலுள்ள வால்பாறைக்கு அழகு, அதனை சுற்றியுள்ள தேயிலை தோட்டங்கள். காணுமிடமெல்லாம் பச்சைக்கம்பளம் விரித்தாற்போன்று, மடிப்பு மடிப்பான தேயிலை தோட்டங்களுக்குள், மலை முகடுகளில் இருந்து வடிந்து வரும் தண்ணீர் என, பார்ப்போரை வசியம் செய்கிறது. வால்பாறையில் 80 சதவீதம் தேயிலை தோட்டம், 10 சதவீதம் காபி தோட்டம், மீதமுள்ள 10 சதவீத பரப்பில் மிளகு, ஏலம்

சாகுபடி உள்ளது. வனப்பரப்புக்கு இடைப்பட்ட பகுதி என்பதாலும், தனியார் தேயிலை தோட்டங்கள் மட்டுமே உள்ளதாலும், வேறு சாகுபடியில் யாரும் கவனம் செலுத்தவில்லை. தேயிலை தோட்ட வேலை நேரம் போக, மீதமுள்ள நேரத்தை பயனுள்ளதாக்கி, ரசாயன விவசாயத்துக்கு எதிராக, வெற்றிக்கொடி பறக்கவிட்டுள்ளனர் வால்பாறை தோட்டத்தொழிலாளர்கள் என்றால், நம்ப முடிகிறதா? நம்பித்தான் ஆக வேண்டும்; ஏனென்றால், இதுதான் உண்மை. மானாம்பள்ளி வனச்சரகத்துக்கு உட்பட்ட, வால்பாறை - முடீஸ் வழித்தடத்தில், ஹைபாரஸ்ட் அருகிலுள்ளது வாகமலை எஸ்டேட். அங்குள்ள தனியார் தேயிலை தோட்டத்தில், தொழிலாளர்களின் 140 குடும்பத்தினர் வசிக்கின்றனர்; தங்கள் குடியிருப்பு அருகில், மழை நீர் வடிந்து செல்லும் ஓடை அருகே, காய்கறி தோட்டம் அமைத்துள்ளனர். ஆண்டில், ஆறு மாதம் மழை நீர் பெருக்கெடுத்து ஓடும். மீதமுள்ள ஆறு மாதங்கள் புதர் மண்டி கிடக்கும் இடத்தை, சுத்தம் செய்து, விவசாயத்துக்கு ஏற்ற இடமாக்கியுள்ளனர் நாகமலை விவசாயிகள். திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து, தேயிலை தோட்ட வேலைக்காக, 80 ஆண்டுகளுக்கு முன், வாகமலைக்கு குடும்பத்துடன் இடம்பெயர்ந்து வந்தனர். இப்போது இரண்டு தலைமுறையாக, இயற்கை விவசாயத்தில் கால்பதித்துள்ளனர்.

மலைப்பிரதேசத்தில், இங்கிலீஷ் காய்கறி தான் விளைவிக்க முடியுமா? நம்ம ஊரில், வீட்டு தோட்டத்தில் விளைவிக்கும் அனைத்து காய்கறி, கீரை வகைகளையும் செழிப்பாக வளர்க்க முடியுமென நிரூபித்துள்ளனர். மழைநீர் மட்டுமே பாய்ந்தோடும் மண், மனித காலடி படாத இடம், ரசாயன கலப்பு இல்லாத இயற்கை விவசாயம். காய்கறிகளுக்கு இவைகள் மேலும் சுவையூட்டுகின்றன.

### இயற்கை விவசாயம்:

வாகமலை விவசாயிகள் கால்நடை வளர்ப்பிலும், அதிக ஆர்வம் கொண்டதால், வீட்டுக்கு ஒரு மாடு வளர்க்கின்றனர். ஓடை பகுதிகளில் ஆண்டு முழுவதும் கிடைக்கும் பசும்புல்லை நம்பி, மாடு வளர்க்கின்றனர். அவற்றின் சாணத்தை குவியலாக சேர்த்து, மட்க வைக்கின்றனர். மழை காலம் முடிந்து, வெயில் காலம் துவங்கியதும், நிலத்தை விவசாயத்துக்கு தயார்படுத்துகின்றனர். அப்போது உலர வைக்கப்பட்ட, மாட்டுச்சாணத்தை மண் மீது தூவி, கலக்குகின்றனர். காய்கறி தோட்டத்துக்கு, இதை தவிர, வேறு எதையும் இடு பொருளாக சேர்ப்பதில்லை.

### மண் வெட்டியே துணை:

பாதங்களை வேகமாக ஊன்றினால், தண்ணீர் ஊற்றெடுக்கும் பகுதியில் தான் இவர்களின் விவசாயம் நடக்கிறது. நிலத்தடி நீர் கசியும் அளவுக்கு இருந்தாலும், தோட்டத்தில் ஒரு மூலையில் குழி தோண்டியுள்ளனர். அதில் ஊற்றெடுத்து தேங்கும் நீரை, பூவாளியில் எடுத்து, மண் உலரும் போது தெளித்து, விவசாயம் செய்கின்றனர். நிலத்தை தயார்படுத்த மாடுகளை பூட்டி உழவு செய்யும் வசதி அங்கு இல்லை. மண் வெட்டியால் நிலத்தை கிளறி, சமப்படுத்துகின்றனர்.

### கமகமக்கும் காய்கறி:

காய்கறி விதைப்புக்கு முன் நிலத்தில் சாணத்தை மட்டுமே இடுகின்றனர். செடி, கொடிகளில் பூச்சி, புழு தாக்குதல் ஏற்பட்டால், வீட்டு அடுப்பு சாம்பலை மட்டுமே தூவுகின்றனர். களைக்கொல்லி மருந்தென்றால் இவர்களுக்கு என்னவென்றே தெரியாது. இயற்கையாக விளைவிக்கும் காய்கறி, கீரை வகையை பறிக்கும் போதே வாசனை கமகமக்கிறது. இயற்கைக்கு வேறேதும் இணையில்லை என்பதை உணர முடிகிறது.

தேயிலை தோட்ட தொழிலில் ஓய்வு பெற்றாலும், விவசாயத்தில் அக்கறை கொண்ட, ராமர்பாண்டி கூறியது... (தொடர்புக்கு: 9489182102) வீட்டுக்கு பின் பகுதியிலும், மழைநீர் வடிந்தோடும் ஓடையிலும் விவசாயம் செய்கிறோம். வால்பாறையில் ஜூன் - செப்., மாதம் வரையிலும் மழை அதிகம் பெய்யும். அக்., மாதம் மழை பெய்வது குறைந்ததும், நிலத்தை தயார் செய்வோம். நவ., மாதம் விதைப்பு செய்து, டிச., மாதம் நடவு செய்வோம். பிப்., முதல் அறுவடை துவங்கும். ஜூன் இரண்டாம் வாரம் வரையிலும் காய்கறி பறிக்க முடியும். மாலை நேரத்தில் குடும்பத்துடன் விவசாய பணி செய்கிறோம். இதன் மூலம் குடும்பத்துக்கு வாரம் 500 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. இவ்வாறு, அவர் கூறினார்.

வாகமலை விவசாயி அய்யாதுரை கூறியது... (தொடர்புக்கு: 94439 34117) கத்தரி, அவரை, பீன்ஸ், பீட்ரூட், சுரைக்காய், முள்ளங்கி, நூல்கோல் போன்ற காய்கறிகளும், மணத்தக்காளி, சிறுகீரை, பசலைகீரை, தண்டங்கீரை வகைகளும் சாகுபடி செய்கிறோம். சாகுபடி நிறைவடையும் போது, செடி, கொடிகளில் இருக்கும் காய்களை விதைக்காக அப்படியே விட்டு விடுவோம். காய்கள் செடியிலே பழுத்து காய்ந்ததும், தண்ணீர் ஊற்றி சுத்தம் செய்து, பதப்படுத்தி வைத்து விடுகிறோம். அடுத்த ஆண்டு அவற்றைத்தான் விதைப்புக்கு பயன்படுத்துவோம். இயற்கையாக விளையும் காய்கறி, கீரையை அறுவடை செய்து, வாரந்தோறும் வால்பாறை டவுனில் வியாபாரம் செய்கிறோம்.வால்பாறை

மார்க்கெட்டுக்கு பொள்ளாச்சியில் இருந்து கொண்டு வரும் காய்கறி விலையை விட குறைவாக விற்கிறோம். இயற்கை காய்கறி என்பதால் மக்களும் தேடி வந்து வாங்குகின்றனர். இவ்வாறு, அவர் கூறினார். தண்ணீர் ஊற்றெடுக்கும் பகுதி; நிலத்தை உழவு செய்ய வசதியில்லை; போக்குவரத்து வசதியில்லாத மலைப்பகுதியில், ரசாயன கலப்பு இல்லாத காய்கறி தோட்டம் சாத்தியமாகும் போது எல்லா வசதிகளும் வாய்ப்புகளும் கைவசமுள்ள நம்மால், காய்கறி தோட்டம் அமைக்க முடியாதா? மனமிருந்தால் மார்க்கமுண்டு.

## 'நம்மால் முடியும்':

கோவை மாவட்ட தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் ராமகிருஷ்ணன் கூறுவதை கேளுங்கள்... சென்னை, கோவை மாநகராட்சி பகுதிகளில், தோட்டக்கலைத்துறை மூலம், நகர்ப்புற காய்கறி அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வீட்டு மாடி, காலி இடங்களில் 'நீங்களே செய்து பாருங்கள்' என்ற திட்டத்தில் காய்கறி வளர்க்கலாம். இதற்கு 2,650 ரூபாய் செலவாகும். அதில், 50 சதவீதம் மானியம் போக, மீதமுள்ள தொகையை மக்கள் செலுத்தினால் போதும். பாலித்தீன் கவர் 20, தென்னை நார் கழிவு, விதை, இயற்கை உரம் என, 15 வகையான பொருட்கள் வழங்கப்படும். தென்னை நார் கழிவுடன், அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா மற்றும் இயற்கை உரத்தை கலந்து, ஒரு வாரத்துக்கு தண்ணீர் தெளித்து மட்க செய்ய வேண்டும். அதன்பின், விதைப்பு செய்ய வேண்டும். செடி வளர்ந்ததும், ஒவ்வொரு பாலித்தீன் பையிலும் மட்கிய நார் கழிவை நிரப்பி, செடியை நடவு செய்ய வேண்டும். தினமும் தண்ணீர் தெளித்து பராமரித்தால் போதும். பூச்சி, புழு தாக்குதலுக்கு வேப்ப எண்ணெய் கலவையை 'ஸ்பிரே' செய்ய வேண்டும். ரசாயன மருந்தில்லாமல், காய்கறியை இயற்கையாக விளைவிப்பதே இந்த திட்டத்தின் நோக்கம். வால்பாறை வாகமலையில் மட்டுமல்ல, இந்த திட்டத்தில் வீட்டு மொட்டை மாடியிலும் விவசாயம் செய்யலாம். இவ்வாறு, துணை இயக்குனர் தெரிவித்தார். திட்டம் குறித்த, மேலும் விவரங்களுக்கு, துணை இயக்குனர் அலுவலகம், தோட்டக்கலைத்துறை, நெ.8, தடாகம் ரோடு, கோவை என்ற முகவரியிலும், 0422 - 2453578 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

### பாம்பன் மீனவர் வலையில் வால் இல்லாத அதிசய மீன்




**ராமேஸ்வரம்:** பாம்பன் நாட்டுப்படகு மீனவர் வலையில், வால் இல்லாத அரிய வகை மீன் சிக்கியது. பாம்பன் கடற்கரையில் இருந்து பிப். 16ம் தேதி மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் 6 நாட்கள் கழித்து, நேற்று பாம்பன் கரைக்கு திரும்பினர். இப்படகின் வலையில், 21 கிலோ எடையில் இரண்டு அடி உயரம், இரண்டரை அடி அகலத்தில் வால் இல்லாத அதிசய மீன் சிக்கியது. ஆழ்கடலில் வாழும் அரியவகை மீன் இனமான, இதனை கடல் மீன் ஆராய்ச்சியாளர்கள் கடைசியாக கண்டறிந்து, "சன்பிஸ்' என பெயரிட்டுள்ளனர். வால் இன்றி காணும் இம்மீன், மேலும் கீழும் உள்ள துடுப்பால் வேகமாக நீந்தும் தன்மை கொண்டதாக, கடல் சார் ஆவலர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து, மீன் வியாபாரிகள் கூறியதாவது: கடலில் அரிதாக வாழும் இம்மீனை, மீனவர்கள் பெரும்பாலும் பார்த்திருக்க முடியாது. "சன்பிஸ்' வகை மீன், மார்க்கெட்டுக்கு புதிது என்பதால், விலை நிர்ணயம் செய்யாமல் மீனவர்களிடம் வாங்கி, கேரளா மார்க்கெட்டுக்கு அனுப்பப்படும் என்றனர்.

### சென்னை, புதுச்சேரியில் சாரல் மழை

**சென்னை:** சென்னையில், கிண்டி, மீனம்பாக்கம்,பல்லாவரம் உள்ளிட்ட பகுதியில் லேசான சாரல் மழை பெய்கிறது. வேதாரண்யம், புதுச்சேரியிலும் மழை பெய்கிறது. பரவலாக மழை பெய்யும், பெரிய அளவில் இருக்காது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.வளிமண்டல சுழற்சி காரணமாக இம்மழை பெய்வதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## வறட்சி கால சிறு தானிய பயிர்களுக்கு மானியம் :விவசாயிகள் எதிர்பார்ப்பு

**காஞ்சிபுரம் :** வறட்சி காலத்தில், சிறு தானியம் பயிரிடும் விவசாயிகளுக்கு, மானியம் வழங்கி ஊக்குவிக்க வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்த்து வருகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், பருவ மழை பொய்ப்பு, நிலத்தடி நீர்மட்டம் குறைவு உள்ளிட்ட காரணங்களால், சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது.

இதனால், வறட்சியில் விவசாயிகளுக்கு கைகொடுக்கும் கேழ்வரகு, கம்பு, மக்காச்சோளம், தினை, வரகு, சாமை ஆகிய சிறு தானிய பயிர்கள் சாகுபடி செய்ய, விவசாயிகளை, வேளாண் நிர்வாகம் ஊக்குவித்து வருகிறது.

இதில், மக்காச்சோளம் பயிருக்கு மட்டுமே 800 ரூபாய் வரையில், மானியம் வழங்கப்படுகிறது. இந்நிலையில், நடப்பு ஆண்டு, 6,600 ஹெக்டர் இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. இதில், 1,600 ஹெக்டர் பரப்பளவு மட்டுமே பயிரிடப்பட்டுள்ளது. அனைத்து பயிர் சாகுபடி உற்பத்தியாளர் விவசாய சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர், டி.என்.ஆர்., சேகர் கூறுகையில், "வறட்சியில் சாகுபடி செய்யும் சிறு தானியம் பயிர்களில், நடவு மானியம், நோய் கட்டுப்படுத்தும் மருத்து கொள்முதல் உள்ளிட்டவற்றுக்கு, மானியம் வழங்க வேளாண் துறை முன் வர வேண்டும்," என்றார்.

இதுகுறித்து, வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) பழனிவேலு கூறியதாவது: சிறு தானியம் பயிரிடும் விவசாயிகளுக்கு, மானியம் வழங்குவதற்கு, உயரதிகாரிகளிடம் பரிந்துரை செய்து வருகிறோம்.மேலும், மூலிகை குணம் கொண்ட மருத்துவப் பயிர்கள் தினை, வரகு, சாமை ஆகிய பயிர்களை மீண்டும் விளைவிக்க, சிறப்பு மானியமும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதற்கும் ஒப்புதல் கிடைத்தால், மாவட்டத்தில் சிறு தானிய பயிர்கள் சாகுபடி அதிகரிக்கும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஆனைமலை பகுதியில் வாத்து வளர்ப்பு தொழிலுக்கு மவுசு : வழிகாட்டுதலுடன் ஈடுபட்டால் லாபம் கிடைக்கும்

**ஆனைமலை :** வாத்து வளர்ப்புத்தொழிலை கால்நடைத்துறையினரின் வழிகாட்டுதலுடன் ஈடுபட்டால், ஆண்டுக்கு அனைத்து செலவு போக ஐந்து லட்சம் வரை வருமானம் பார்க்கலாம், என இந்தொழிலில் ஈடுபட்டவர்கள்

தெரிவிக்கின்றனர்.கேரள மாநில மக்களால் விரும்பி சாப்பிடப்படும், அசைவ உணவு வகைகளில் தவறாமல் இடப்பெறக்கூடியது தமிழகத்தில் இருந்து செல்லும் வாத்து முட்டைகள் ஆகும். தமிழகத்தில் நெல் வயல்கள் நிறைந்த காவிரி டெல்டா பகுதிகளான தஞ்சாவூர், ஆரணி, புதுக்கோட்டை, ஈரோடு மாவட்டத்தின் ஈரோடு சுற்றுவட்டார கிராமங்கள், கோபிசெட்டிபாளையம், திண்டுக்கல் மாவட்டத்தின் பழநி தாலுகா, ஆயக்குடி பகுதிகள், திருப்பூர் மாவட்டத்தில் மடத்துக்குளம், குமரலிங்கம், கல்லாபுரம், கோவை மாவட்டத்தில் ஆனைமலை, பொங்காளியூர், சேத்துமடை பகுதிகளில் உள்ள நெல் வயல்களில் அறுவடைக்கு பின் வாத்து மேய்ச்சல் தொழில் நடைபெறும். மிகப்பெரிய பொருளாதாரச்சந்தையை கொண்டுள்ள, வாத்து வளர்ப்புத்தொழிலுக்கு சரியான வழிகாட்டுதலும், முறையான சந்தைப்படுத்ததாலும் இல்லாததால் இன்று இத்தொழிலில் யாரும் ஆர்வம் காட்டுவதில்லை.

தமிழகத்தில் தற்போது உள்ள வாத்து மேய்ப்பவர்கள் கேரளா மற்றும் ஆரணி வாத்துக்களை அதிகம் வைத்துள்ளனர். அவர்கள் சாதாரணமாக ஆயிரத்துக்கும் அதிகமான வாத்துக்களை வைத்திருப்பார்கள். வாய்க்கால், நீர்நிலைகள் உள்ள பகுதிகளை தேர்ந்தெடுத்து அருகில் உள்ள நெல்வயல்களில் பகல் முழுவதும் வாத்துகளை மேயவிடுவார்கள். இரவில் பட்டி போட்டு அவற்றை அடைத்து வைத்து விடுவார்கள். அதிகாலை நேரத்தில் வாத்துக்கள் முட்டையிட துவங்கும்.

வாத்து முட்டைகள்: வாத்துக்கள் நான்காவது மாதத்தில் இருந்து முட்டையிட துவங் கும். ஒரு வாத்து ஒரு ஆண்டில் 200 முட்டைகள் வரையிடும். ஆயிரம் வாத்துக்கள் கொண்ட ஒரு கூட்டத்திற்கு ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 600-முதல் 700 முட்டைகள் வரை கிடைக்கும். தீனிக்குறைவாக இருக்கும்பட்சத்தில் 450 முதல் 475 முட்டைகள் கிடைக்கும். வாத்து முட்டையை கேரள வியாபாரிகள், வாத்து பட்டியிருக்கும் இடத்திலேயே வந்து வாங்கிக்கொள்கிறார்கள். ஒரு முட்டை ரூபாய் 6 க்கு விற்பனையாகிறது. கேரள வாத்துக்களின் முட்டைகள் 75 கிராம் எடையும், ஆரணி வாத்துகளின் முட்டைகள் 60 கிராம் எடையும் கொண்டது.

வாத்துக்கள் சில நேரங்களில் முட்டையிடும் திறன் குறையும். அப்போது முட்டையிடும் திறனை அதிகபடுத்த வாத்துகளுக்கு, நந்தன் மீன் கருவாட்டை இரவில் தண்ணீரில் ஊறப்போட்டு, காலை,மாலை என இருநேரங்கள் தர முட்டையிடும் திறன் அதிகரிக்கும். வாத்து வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர் கூறியதாவது:

ஒரு வாத்து ஒரு ஆண்டில் 200 முட்டைகள் வீதம் ஆயிரம் வாத்துக்களுக்கு இரண்டு லட்சம் முட்டைகள் கிடைக்கும். ஆண்டுக்கு 12 லட்சம் ரூபாய் வரை வருமானம் வர கூடியது வாத்து வளர்ப்பு தொழில்.வாத்துக்கு வரக்கூடிய நோய்களில் முக்கியமானது 'ஹார்ட் அட்டாக்' இது பெரும்பாலும் கோடைகாலங்களில் தான் வாத்துகளை தாக்குகிறது. இந்த காலகட்டத்தில் வாத்துக்களுக்கு போதுமான நீர்வசதி இருந்தால் இழப்புகளை தவிர்க்கலாம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.கால்நடை துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், 'வாத்து வளர்ப்பு தொழில் நடத்துபவர்கள் நிலையாக ஒரு இடத்தில் இருப்பதில்லை. பல்வேறு இடங்களுக்கு தொழில் நிமித்தமாக இடம் பெயர்ந்து விடுகிறார்கள். வாத்துகளுக்கு முன்பு காப்பீடு செய்யப்பட்டு வந்தது. தற்போது காப்பீடு செய்வதில்லை என இந்த தொழிலில் ஈடுபட்டவர்கள் கூறுகின்றனர். கால்நடைத்துறையில் இதுவரை அதிகாரபூர்வமாக வாத்துகளுக்கு காப்பீடு செய்வதை நிறுத்தவில்லை. காப்பீட்டு நிறுவனங்கள் வாத்துகளுக்கு காப்பீடு செய்வதை நிறுத்தி இருக்கலாம். என்றார்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**திருவள்ளூர்** : திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், விவசாயிகள் குறைதீர் கூட்டம், ஆட்சியர் வீர ராகவ ராவ், தலைமையில், நடந்தது. கடன் பெறாத விவசாயிகளுக்கும், இன்சூரன்ஸ் தொகை வழங்குவது குறித்த, புதிய பயிர் காப்பீடு திட்டம் பற்றி, விளக்கம் அளிக்கப்பட்டது. வேளாண் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த கையேடு அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும் என, வேளாண்மை அலுவலர்களிடம், ஆட்சியர் கேட்டுக் கொண்டார். இக்கூட்டத்தில் வேளாண் இணை இயக்குனர் சுந்தர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுப்ரமணியன், திருவள்ளூர் வருவாய் கோட்ட அலுவலர் அபிராமி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தென்னம்பாளையம் மார்க்கெட்டில் பசுமை குடில்: காய்கறி விவசாயிகள் வலியுறுத்தல்

**திருப்பூர்** : தென்னம்பாளையம் காய்கறி மார்க்கெட்டில், ஆயிரக்கணக்கான விவசாயிகளும், மொத்த வியாபாரிகளும் வெயிலில் காத்திருக்க வேண்டியிருப்பதால், பசுமை குடில் அமைக்க வேண்டுமென கோரிக்கை

விடுக்கப்பட்டுள்ளது. திருப்பூர் மாநகராட்சி 50வது வார்டு பகுதியில், தென்னம்பாளையம் மொத்த விற்பனை மார்க்கெட், சில்லரை விற்பனை மார்க்கெட், உழவர் சந்தை இயங்கி வருகின்றன. தினமும் ஆயிரக்கணக்கான விவசாயி களும், வியாபாரிகளும், தங்களது விளைபொருட்களை எடுத்து வந்து விற்பனை செய்கின்றனர். மொத்த விற்பனை மார்க்கெட்டில் மட்டும் தினமும் ஐந்து டன் எடையுள்ள காய்கறிகள், கீரைகள் விற்கப்படுகின்றன. எவ்வித வசதியும் இல்லாமல் இருந்த தென்னம்பாளையம் மார்க்கெட்டுக்கு, இரண்டு ஆண்டுகளுக்கு முன், கான்கிரீட் தளம் அமைக்கப்பட்டது. இருப்பினும், வளாகம் முழுவதும் தளம் அமைக்காததால், மேற்கு பகுதியில் தரையில் வைத்து, வெங்காயம், தக்காளி உள்ளிட்டவை விற்கப்படுகின்றன. மார்க்கெட் முழுவதும் மேற்கூரை வசதி இல்லாததால், விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் வெயிலால் அவதிப்படுகின்றனர்.தக்காளி, கீரை வகைகள், கருவேப்பிலை, கொத்தமல்லி உள்ளிட்ட சில விளைபொருட்கள் வெயில் கொடுமை தாங்காமல் எளிதில் வாடிவிடுகின்றன. இதனால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. நாள் முழுவதும் கொளுத்தும் வெயிலில் காத்திருப்பதால், விவசாயிகளுக்கும் உடல் நலக்கோளாறு ஏற்படுகிறது.

விவசாயிகள் நலன் கருதியும், விளைபொருட்களை பாதுகாப்பாக வைத்திருந்து விற்க ஏதுவாகவும், பசுமை குடில் போன்ற மேற்கூரை அமைத்துக் கொடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது. லாரி, வேன்களில் கொண்டு வரப்படும் காய்கறிகள், வளாகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இறக்கி வைத்து விற்கப்படுவதால், லாரிகள் எளிதாக சென்று வரும் வகையில், உயரமான பசுமை குடில் அமைக்க வேண்டுமென விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டத்தில், கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பு திட்டத்தின் கீழ், கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி போடப்படுகிறது. இதற்காக, நாளை காலை 11 மணிக்கு, அனைத்து ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டம் நடைபெறுகிறது. இதில், கால்நடை வளர்ப்போர் கலந்து கொண்டு, கால்நடை மருத்துவர்கள் கூறும் அறிவுரைபடி குறிப்பிட்ட தேதியில், குறிப்பிட்ட இடத்திற்கு கால்நடைகளை அழைத்து சென்று தடுப்பூசி போட்டு கொள்ளலாம். இதற்காக, மார்ச்., 1 முதல் 21 வரை முகாம் நடத்த கால்நடை துறையினர் திட்டமிட்டுள்ளனர்.

**மல்லிகை கிலோ ரூ.150**

திண்டுக்கல் சீசன் துவங்கியுள்ளதை அடுத்து, திண்டுக்கல் பூ மார்க்கெட்டில், மல்லிகைப்பூ நேற்று கிலோ ரூ.150க்கு விற்பனையானது. நிலக்கோட்டை, ஏ.வெள்ளோடு, செம்பட்டி, வத்தலக்குண்டு உள்ளிட்ட பகுதிகளில் மல்லிகைப்பூ விளைவிக்கப்படுகிறது. இவை திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகிறது. இதனை தஞ்சை, திருச்சி, கரூர், ஈரோடு உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். திண்டுக்கல் மார்க்கெட்டில், மல்லிகைபூ தினமும் ஒரு டன் வரை விற்பனையாகிறது. சீசன் துவங்கியுள்ளதால், நேற்று மட்டும் இரண்டு டன் வரை விற்பனைக்கு வந்தது. வரத்து அதிகரித்ததால், கடந்த வாரம் கிலோ ரூ.400 முதல் ரூ.1,000ம் வரை விற்கப்பட்ட மல்லிகை, ரூ.150க்கு விற்பனையானது. அதேபோல், கனகம்பரம் ரூ.300, ஜாதிமல்லி ரூ.300 என, மற்ற பூக்களின் விலையும் குறைந்திருந்தது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நெகமத்தில் ரூ.1.65 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்**



பொள்ளாச்சி: கோவை மாவட்டம் பொள்ளாச்சியை அடுத்த நெகமம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், கொப்பரை ஏலம் நடைபெற்றது. நெகமம், காட்டம்பட்டி

உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள் 39 மூட்டை கொப்பரை கொண்டு வந்திருந்தனர். 24 மூட்டை முதல் தர கொப்பரையாகவும், 14 மூட்டை 2ம் தர கொப்பரையாகவும் தரம் பிரிக்கப்பட்டு ஏலம் விடப்பட்டது. முதல் தர கொப்பரை ரூ.77.25 முதல் ரூ.82 வரையிலும், 2ம் தர கொப்பரை ரூ.65.75 முதல் யி76.75 வரை ஏலம் போனது.

மொத்தம் இரண்டரை டன் கொப்பரை ரூ.1.65 லட்சத்துக்கு ஏலம்போனது.

நெகமம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த வாரத்தை விட இந்த வாரம், விவசாயிகள் கொண்டு வந்த கொப்பரைக்கு அதிகபட்சமாக யி4 முதல் யி7 வரை விலை உயர்ந்துள்ளது என்று, ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பா ளர் செல்வராஜ் தெரிவித்தார்.

### இயற்கை வேளாண் பயிற்சி

**உத்திரமேரூர், :** உத்தரமேரூர் அடுத்துள்ள கைத்தண்டலம் கிராமத்தில் எழில்சோலை அறக்கட்டளை சார்பில் இயற்கை வேளாண் தோட்டத்தில் மரம் வளர்ப்பு, சுற்று சூழல் மற்றும் இயற்கை உணவுகளை பற்றிய பயிற்சி நடைபெற்றது.

அறக்கட்டளை நிறுவனர் மாசிலாமணி மரம் வளர்ப்பின் நன்மைகள் இயற்கை பாதுகாப்பு, இயற்கை உணவு, விவசாயம் பற்றி விளக்கி கூறினார்.

திருக்கழுக்குன்றம் ஆதிதிராவிடர் நலத்துறை நடுநிலைப்பள்ளியின் 102 மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

### தேங்காய் பருப்பு விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**கரூர், :** தேங்காய் பரு ப்பு விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கரூர் மாவட்டம், குளத்து ப்பாளையம், வேட்டமங்கலம், குந்தாணிப்பாளை யம், ஒரம்புப்பாளையம், ஓலப்பாளையம், நல்லிக்கோயில், கவுண்டன்புதூர், திருக்காடுதுறை, புகழூர், தோட்டக்குறிச்சி, கடம்பங்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக தென்னை பயிரிடப்பட்டுள்ளது. விவசாயிகள் இந்த தேங்காய் களை

கூலிஆட்கள் மூலம் பறித்து தேங்காய் பருப்புக ளை உலரவைக்கும் பணி யை மேற்கொள்கின்றனர். உலர வைத்த தேங்காய் பருப்புகள் மண்டிகளுக்கு அனுப்பபப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. பல விவசாயிகள் தேங்காய் மண்டி வைத்துள்ளவர்களுக்கு குத்தகைக்கு விடுகின்றனர். இவர்கள் முதிர்ந்த தேங்காய் பருப்பு தயார் செய்து விற்பனைக்காக அனுப்புகின்றனர். தமிழகத்தின் பல பகுதிகளுக்கும், கர்நாடகா, ஆந்திரா, கேரளா, போன்ற மாநிலங்களுக்கு எண்ணை ஆலைகளுக்கு அனுப்பப்படுகின்றன.கரூர் அருகே சாலைப்புதூரில் செயல்படும் வேளாண்மை விற்பனை மையத்தில் தேங்காய் பருப்புகள் ஏலம் விடப்படுகின்றன. எண்ணை நிறுவனங்களின் பிரதிநிதிகளும், வியாபாரிகளும் இங்கு வந்து கொப்பரை தேங்காய் கொ ள்முதல் செய்கின்ற னர். இ ந்த வாரத்தில் ஆயிரம் கிலோ கொண்ட கொப்பரைத் தேங்காய் பருப்பு ரூ.75ஆயிரத்திற்கு விலை போனது. கடந்த வாரம் இந்த விலை ரூ.65ஆயிரமாக இருந்தது. ஒரு தேங்காயக்கு ரூ.15 விலை கிடைத்தது. கடந்த வாரம் ரூ.10ஆக இருந்தது.

**மாவட்டத்தில் வைக்கோல் வழங்கும் திட்டம் 3 இடங்களில் துவக்கம்**

**கரூர், :** விவசாயிகளுக்கு 3 இடங்களில் வைக்கோல் வழங்கும் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தாலுகா முடிகணம், ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் தரம் உயர்த்தப்பட்ட புதிய மருந்தகம், உலர் தீவன கிடங்குகள் துவக்க விழா நடைபெற்றது. கலெக்டர் ஜெயந்தி தலைமை வகித்தார். கரூர் எம்பி தம்பிதுரை முன்னிலை வகித்தார். போக்குவரத்துத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார்.

பின்னர் அவர் பேசியதாவது:

கரூர் மாவட்டத்தில் முதல் கட்டமாக தோகைமலை, தரகம்பட்டி, அரவக்குறிச்சி பகுதிகளில் கால்நடை மருந்தகங்கள் மூலம், உலர்தீவன கிடங்குகள் (வைக்கோல்) விற்பனை துவங்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ.30லட்சம் ஒதுக்கீடு பெற்று ஒவ்வொரு மருந்தகத்திலும், தலா ரூ.10லட்சம் மதிப்பீட்டில் பெரிய விவசாயிகள், வியாபாரிகளிடம் இருந்து போட்டி விலைப்பட்டியல் மூலமாக வைக்கோல் பெறப்பட்டு, கிலோ ரூ.2வீதம் மானிய விலையில் கால்நடை வளர்ப்போருக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஒரு நாளைக்கு 3கிலோ வீதம் அதிகபட்சமாக

5மாடுகளுக்கு 15கிலோ வீதம் ஒருவாரத்திற்கு 105கிலோ வைக்கோல் வழங்கப்படும். மாடு வளர்க்கும் விவசாயிகள் அந்தந்த பகுதியில் உள்ள கால்நடை மருந்தகங்களில் அலுவலர்களின் ஆலோசனைப்படி பதிவுசெய்து பெற்றுக் கொள்ளவேண்டும். இத்திட்டம் வறட்சிக்காலமாக கருத்தில் கொண்டு மூன்று மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. எனவே கால்நடை வைத்திருக்கும் விவசாயிகள் இதன்மூலம் கால்நடைகளுக்கு தேவையான தீவனங்களை (வைக்கோல்) பெற்று பால் உற்பத்தியை அதிகரிப்பதுடன், கால்நடைகளையும் நல்லமுறையில் பராமரிக்க முடியும் என்றார்.

முடிகணம், கோடந்தூர், ஓந்தாம்பட்டி, இரும்பூதிப்பட்டியில் உள்ள கால்நடை மருந்தகங்கள் தரம் உயர்த்தப்பட்ட மருந்தகங்களாக்கப் பட்டுள்ளதை திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சித் தலைவர் கீதாமணிவண்ணன், மாவட்ட வருவாய் அலுவலர் அருணா, கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் டாக்டர் கோபிநாத், துணை இயக்குனர் டாக்டர் பழனிவேல், உதவி இயக்குனர் குழந்தைசாமி, கால்நடை மருத்துவர்கள் ராஜேந்திரன், மாரிமுத்து, மோகன்ராஜ், தமிழரசன், முரளிதரன், மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் மார்க்கண்டேயன் ஊராட்சி தலைவர் கண்ணம்மாள், சுப்பிரமணியன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தி கோடையில் நவீன தொழில்நுட்ப நெல் சாகுபடியில் கூடுதல் மகசூல் வேளாண் அதிகாரி யோசனை**

**புதுக்கோட்டை, :** அதிக உற்பத்தி திறன் அளிக்கவல்ல திருந்திய நெல் சாகுபடித் தொழில் நுட்ப முறையில் கோடை நெல் சாகுபடி செய்து கூடுதல் மகசூல் பெற விவசாயிகளை வேளாண் அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து புதுகை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஷாஜ ஹான் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தற் போது சம்பா அறுவடைப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. தண்ணீர் வசதி உள்ள இடங்களில் கோடை நெல் சாகுபடி செய்ய விவசாயிகள் தயாராகி வருகின்றனர். கோடை நெல் சாகுபடிக்கு ஆடுதுறை 43, 45, 37, 36 போன்ற குறுகிய கால ரகங்களைச் சாகுபடி செய்யலாம். கடந்த ஆண்டு மாவட்டத்தில் வடகிழக்குப் பருவ மழை இயல்பான மழையளவை விடக் குறைவாகப் பெய்ததால் நிலத்தடி நீர் குறைய வாய்ப்புள்ளது. எனவே, இருக்கும்

தண் ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி நெல் சாகுபடி செய்திட திருந்திய நெல் சாகுபடி முறையில் கோடை நெல் சாகுபடி செய்யக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நெல் விளைச்சலில் உற்பத்தித் திறனை அதிகரிக்க கண்டுபிடிக்கப்பட்ட புதிய தொ ழில்நுட்பமான திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்தால் ஒரு ஹெக்டேருக்கு சராசரியாக 9ஆயிரம் கிலோ மகசூல் கிடைக்கிறது.

இதில் ஒரு ஏக்கர் நடவு செய்ய 2 கிலோ விதை போதுமானது. ஒரு ஏக்கர் நடவு செய்ய ஒரு சென்ட் நாற்றங்கால் மட்டும் போதுமானது, 10, 14 நாட்கள் வயதான இளம் நாற்றுக்களை நடவு செய்வதால் அதிக தூர்கள் பிடிக்கிறது.

இளம் நாற்றுக்களை நன்கு சமன் செய்யப்பட்ட நடவு வயலில் 22.5 செ.மீ. 22.5 செ.மீ. இடைவெளியில் குத் துக்கு ஒரு நாற்று வீதம் சதுர முறையில் நடவு செய்ய வேண்டும். இம்முறையில் நீர் மறைய நீர் பாசனம் செய்ய வேண் டும்.

வயலில் 2.5 செ.மீ.க்கு அதிகமாக நீர் நிறுத்த தேவையில்லை. இதனால் நீர் தேவை பெருமளவு குறைகிறது. கோனாவீடர் என்ற களையெடுக்கும் கருவியினைக் கொண்டு நடவு செய்த 10 ம் நாள் முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை நான்கு முறை வயலில் குறுக்கும் நெடுக்குமாக ஓட்டி களைகளை மண்ணிலேயே அமிழ்த்தி இயற்கை உரமாக மாற்றுவதோடு மண்ணை கிளறி விடுவதால் தூர்கள் அதிகம் பிடித்து மகசூல் கூடுகிறது. இலை வண்ண அட்டை யைப் பயன்படுத்தி தேவையான தழைச் சத்தை மேல் உரமாக இடுவதால் உரத் தேவையினையும் குறைக்கலாம்.இத்தகைய சிறப்பம்சங்களைக் கொண்ட திருந்திய நெல் சாகுபடி முறையினை புதுக் கோட்டை மாவட்ட விவசாயிகள் நடப்பு கோ டைப் பருவத்தில் கடைப்பிடித்து குறைந்த தண்ணீர் மற்றும் செலவில் கூடுதல் மகசூல் பெறவும் இது குறித்து மேலும் விபரங்களுக்கு தங்கள் பகுதி வட்டார வேளாண் விரிவாக்க மையங்களைத் தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஷாஜ ஹான் கேட்டுக்கொண்டுள்ளார்.

**இரண்டாம் போக நெல் அறுவடை பணிகள் துவக்கம்**

**கூடலூர், :** கம்பம் மஞ்சக்குளம் பகுதியில் இரண்டாம் போக அறுவடைப்பணிகள் தொடங்கி உள்ளன. தண்ணீரின்றி இரண்டாம் போக நெல் விளைச்சல் பாதியாக குறைந்ததால் விவசாயிகள் வருத்தத்தில் உள்ளனர்.

தேனி மாவட்டத்தில் முல்லைப்பெரியாற்று தண்ணீர் மூலம் 14,707 ஏக்கர் நிலப்பரப்பில் இருபோக நெல்விவசாயம் நடந்து வருகிறது. கம்பம் மஞ்சக்குளம் பகுதியில் இரண்டாம் போக நெல் விவசாயம் செய்யப்பட்டு சுமார் 3 மாதங்களுக்கு மேல் ஆகி உள்ளது. இந்நிலையில் நெற்பயிர்கள் நன்கு வளர்ந்து கதிர்கள் உருவாகி பால் பிடித்து நெல் மணிகளாக மாறி வந்தன. அப்போது கடந்த மாதம் முதல், பெரியாறு அணையின் நீர் மட்டம் குறைந்ததால், அணையிலிருந்து விவசாயத்திற்கு திறக்கப்பட்ட தண்ணீர் முற்றிலும் நிறுத்தப்பட்டது. அறுவடைக்கு ஒருசில வாரங்களே இருந்த நிலையில் திடீரென தண்ணீர் நிறுத்தப்பட்டதால் நெல் விவசாயம் பாதித்தது.

இதனால் கம்பம் சின்னவாய்க்கால் தண்ணீரை நம்பி உள்ள மஞ்சள்குளம் பகுதியில் கருகிய நெற்பயிர்களுக்கு, விவசாயிகள் டேங்கர் லாரிகளில் தண்ணீர் பிடித்து கொண்டு வந்து தெளித்தனர். முறையாக தண்ணீர் கிடைக்காததால் நெற்பயிர்கள் விளைச்சல் பாதியாக குறைந்தது. இந்நிலையில் நேற்று முதல் இப்பகுதியில் அறுவடை இயந்திரம் மூலம் இரண்டாம் போக நெல் அறுவடைப்பணி தொடங்கி உள்ளது.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூறுகையில், ‘முறையாக தண்ணீர் கொடுக்காததால் இரண்டாம் போக விவசாயம் முழுமையாக பாதித்துள்ளது. ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்துள்ளோம். ஏக்கருக்கு 30 மூடை நெல் அறுவடை செய்யவேண்டிய இடத்தில் 10 முதல் 15 முடை நெல் மட்டுமே கிடைத்துள்ளது. 60கிலோ எடைகொண்ட நெல்மூடை ஒன்றுக்கு ரூ.750 முதல் 800 வரை விலை போகிறது. மொத்தத்தில் இரண்டாம் போகம் விவசாயிகளுக்கு மாபெரும் இழப்புதான்’ என்றனர்.

**நிலத்தடி நீரை பாதுகாக்க நீர் நிலைகளில் கருவேல மரங்களை அகற்ற முடிவு**

**சிவகாசி, :** வறட்சி மிகுந்த பகுதியாக கண்டறியப்பட்டுள்ள சிவகாசி பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் மிகவும் குறைந்து வருவதால் நீர்நிலைகளில் உள்ள கருவேலமரங்களை அகற்ற முடிவு செய்யப்பட்டது.

சிவகாசி ஆர்டிஓ கீர்த்திபிரியதர்ஷிணி தலைமையில், நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுப்பது குறித்து ஆய்வுக்கூட்டம் நடந்தது. இதில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தனியார் கல்லூரி

மாணவர்கள் கருவேலமரங்களை அகற்றுவது குறித்த சைக்கிள் பேரணி நடந்தது. பேரணியை துவக்கிவைத்து ஆர்டிஓ பேசுகையில், “சிவகாசி பகுதியில் உள்ள கண்மாய்களில் கருவேலமரங்கள் அதிகமாக இருப்பதால் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. இதை சரிசெய்வதற்காக சிவகாசி பகுதியில் உள்ள முத்தாலநாயக்கன்பட்டி கண்மாயில் 10.8 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள கருவேல மரங்களை அகற்றிட ரூ.13 ஆயிரத்துக்கும், சுப்பிரமணியபுரம் கண்மாயில் 2.4 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள கருவேல மரங்களை அகற்றிட ரூ.23 ஆயிரத்துக்கும் ஏலம் விடப்பட்டு, கருவேலமரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பொதுமக்களுக்கும், குழந்தைகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சிவகாசி பகுதிகளில் உள்ள பள்ளி மாணவ,மாணவிகளுக்கு காலை கொடிவணக்க நேரத்தில் கருவேலமரங்களை அகற்றுவது தொடர்பாகவும், அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் விழிப்புணர்வு வாசகங்கள் உறுதிமொழியாக ஏற்க வேண்டும். பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் தங்களது பட்டாநிலங்களில் எரிபொருளுக்காக கருவேல மரங்களை வளர்ப்பதைத் தவிர்க்க வேண்டும். மண்ணின்தன்மை பாதுகாக்கப்படுவதோடு நிலத்தடி நீர்மட்டமும் உயரும் வாய்ப்பு உள்ளது. இதனால், கருவேலமரங்கள் வளர்ப்பதை அனைவரும் கைவிட வேண்டும்“ என்றார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

**திருவள்ளூர், :** திருவள்ளூர் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நேற்று நடந்தது. கலெக்டர் வீரராகவ ராவ் தலைமை வகித்தார். கூட்டத்தில், பயிர் விளைச்சல் போட்டியின் விவரம் குறித்து குறுந்தகடு மூலம் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. கடந்த மாதம் பெறப்பட்ட விவசாயிகளின் கோரிக்கை மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் விவாதிக்கப்பட்டது. வேளாண்மை இணை இயக்குநர் சுந்தர், கலெக்டரின் நேர்முக உதவியாளர் சுப்பிரமணியன், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**பெரம்பலூரில் ரூ.1.5 கோடியில் புதிய வேளாண் அலுவலகம்காணொளி காட்சி மூலம் முதல்வர் திறந்துவைத்தார்**

**பெரம்பலூர், :** பெரம்பலூரில் ரூ.1.5 கோடி மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள புதிய வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்தை சென்னையில் இருந்த படி காணொளி காட்சி மூலம் தமிழக முதல்வர் ஜெயலலிதா திறந்துவைத்தார்.
பெரம்பலூர் கலெக்டர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் ரூ 1.5 கோடி மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள புதிய வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்தை தமிழக முதல்வர் ஜெயலலிதா, சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி காட்சி மூலம் திறந்துவைத்தார்.
இதைத் தொடர்ந்து பெரம்பலூரில் கலெக்டர் தரேஸ் அஹமது, புதிதாகக் கட்டடப்பட்டுள்ள வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்தில் குத்துவிளக்கேற்றி அலுவலக செயல்பாட்டைத் துவக்கிவைத்து, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.
பெரம்பலூர் நிகழ்ச்சியில் வேளாண் துறை இணை இயக்குநர் ஆல்பிரட், உதவி இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், வேளாண் பொறியியல் துறை உதவி இயக்குநர் ராஜேந்திரன் உள்ளிட்ட வேளாண் அலுவலர்கள் பலர் பங்கேற்றனர்.

**ரூ.14.5 கோடி மதிப்பீட்டில் சித்தமல்லி அணையில் சீரமைப்பு பணி துவக்கம் விவசாயிகள் மகிழ்ச்சி**

**அரியலூர், :** தா.பழூர் ஒன்றியம், சித்தமல்லி அணையில் ரூ.14.52 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இதையடுத்து விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஒன்றியம், கார்குடியில் அமைந்துள்ள சித்தமல்லி நீர்த்தேக்க அணையானது ரூ.4.79 கோடி மதிப்பில் புதுப்பிக்கப்பட்டு கடந்த 1991ல் திறக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்த போதும் இடையே அவ்வப்போது முழுமையாகப் பராமரிக்கப்படாததாலும், முறையாகத் தூர்வாரப் படாததாலும் இதை மீண்டும் சீரமைக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதை ஏற்றுக்கொண்ட தமிழக அரசு, மத்திய நீர்வள ஆணையம் மூலம் ஒப்புதல் பெற்று உலக வங்கி நிதி உதவியுடன் அணைகள் பாதுகாப்பு மற்றும் சீரமைப்புத்

திட்டத்தின் கீழ் ரூ.14.52 கோடி மதிப்பில் நிதி ஒதுக்கீடு செய்தது. மேலும், இப்பணிகளை பொதுப்பணி மற்றும் நீர்வள ஆதாரத் துறை, நீடுர் காவிரி வடிநில வட்டத்தின் திருச்சி மற்றும் அரியலூர், ஜெயங்கொண்டம் மருதையாறு வடிநிலக் கோட்டம் மூலம் மேற்கொள்ளுமாறு ஆணையிட்டது.

இதைத் தொடர்ந்து, அணையில் சீரமைப்பு பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. துவக்க விழாவில் தலைமைப் பொறியாளர் பைந்தமிழ்ச்செல்வன், செயற்பொறியாளர் சீனிவாசன், உதவிச் செயற்பொறியாளர் ராஜேந்திரன், உதவிப் பொறியாளர் வேல்முருகன், ஒன்றியக் குழுத் துணைத்தலைவர் சின்னத்துரை மற்றும் ஒப்பந்தக்காரர்கள் கலந்துகொண்டனர். இப்பணிகள் துவங்கப்பட்டுள்ளதை அடுத்து விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.வெள்ளக்கால பாதிப்பு தடுக்கப்படும் சித்தமல்லி அணை சீரமைப்பு பணிகள் குறித்து பொதுப்பணித் துறை அதிகாரிகள் கூறியதாவது: சித்தமல்லி நீர்த்தேக்க அணையின் மூலம் நேரடி மற்றும் ஏரிகளின் வாயிலாக சுமார் 5 ஆயிரத்து 80 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. இந்த அணை கட்டப்பட்டு சுமார் 25 ஆண்டுகள் ஆவதால் அணையின் கரைகள் பலவீனமடைந்து அதன் முழுக்கொள்ளளவான 226.80 மீ. கண அடி அளவுக்கு தண்ணீரைத் தேக்க இயலாத நிலை இருந்து வருகிறது. தற்போது மேற்கொள்ளப்படும் இந்த சீரமைப்பு பணிகள் மூலம் கரையை பலப்படுத்துதல், புதியரக உபரிநீர்ப் போக்கி அமைத்தல், கதவணைகள் பழுது பார்த்தல், 2 தரைப்பாலங்கள் அமைத்தல், அணையின் உட்புறம் உள்ள கரையில் பழுது பார்த்தல் மற்றும் மின் வசதிகள் மேம்படுத்துதல் ஆகியன மேற்கொள்ளப்பட உள்ளன. இதனால் வெள்ளக்காலங்களில் ஏற்படும் பாதிப்புகளை முற்றிலும் தடுக்க முடியும் என்றனர்.

## இயற்கை, இடர்பாட்டில் சிக்கினால் 1093 எண்ணை தொடர்பு கொள்ளலாம் மீனவர்களுக்கு அறிவுரை

**அதிராம்பட்டினம்,** :கடலில் இயற்கை, இடர்பாடுகளில் சிக்கி கொண்டால் 1093 எண்ணை தொடர்பு கொள்ளலாம் என்று மீனவர்களுக்கு ஐஜி அறிவுரை வழங்கினார்.அதிராம்பட்டினத்தில் கடலோர பாதுகாப்பு குழுமம் சார்பில் கலந்தாய்வு, விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. கடலோர பாதுகாப்பு குழுமம் ஐஜி சொக்கலிங்கம் தலைமை வகித்தார். கூட்டத்தில் கலெக்டர் சுப்பையன்

பங்கேற்றார். இதைதொடர்ந்து மீனவர்களிடம் குறைகள் கேட்கப்பட்டது. கடல் வளம் அழிந்து வருவதால் இரட்டை மடி பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீனவ பொறுப்பாளர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து ஐஜி சொக்கலிங்கம் பேசுகையில், தடை செய்யப்பட்ட கடல்வாழ் உயிரினங்களை பிடிக்கக்கூடாது. தடை செய்யப்பட்ட இரட்டை மடி வலைகளை பயன்படுத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கடலுக்கு மீன்பிடிக்க செல்லும்போது மீனவர்கள் 2 படகுகள் அல்லது 3 படகுகள் சேர்ந்து செல்லுங்கள். அப்போதுதான் ஆபத்து நேரத்தில் உதவி செய்து கொள்ள முடியும். கடலில் இயற்கை இடர்பாடுகளில் சிக்கி கொண்டால் 1093 எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

அதிவிரைவு படகு, சிறிய ரோந்து கப்பல், ஹெலிகாப்டர் ஆகியவற்றை பயன்படுத்தி மீனவர்களை இடர்பாடுகளிலிருந்து காப்பாற்றுவர். கடலில் எந்த பொருள்கள் மிதந்து வந்தாலும் எடுப்பதற்கு முயற்சிக்க கூடாது. அன்னியர் நடமாட்டம் இருந்தால் 1093 எண்ணை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம் என்றார். தஞ்சை மாவட்டத்தில் உள்ள 27 மீனவ கிராமத்திலிருந்து மீனவ சங்க பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

**சென்ட்ரல் மார்க்கெட்டில் வரத்து அதிகரிப்பால் முட்டைக்கோஸ் கிலோ ரூ.8க்கு விற்பனை**

**மதுரை, :** மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் வரத்து அதிகரிப்பால் முட்டைக்கோஸ் கிலோ ரூ.8க்கு விற்கப்படுகிறது.

நேற்றைய விலை நிலவரம் (கிலோ, ரூபாயில்):

நாட்டு தக்காளி 5, கத்தரிக்காய் 20, வெண்டைக்காய் 20, பல்லாரி 15, சின்ன வெங்காயம் 20, உருளைக்கிழங்கு 20, சேப்பங்கிழங்கு 40, கருனை 40, கேரட் 15, பீட்ரூட் 20, பட்டர் பீன்ஸ் 70, சோயா பீன்ஸ் 60, பச்சை பட்டாணி 25, முருங்கை பீன்ஸ் 30, நூக்கல் 20 முள்ளங்கி 20, அவரை 20, மிளகாய் 20, சுரைக்காய் 12, சவ்சவ் 15, சீனி அவரைக்காய் 25, வெள்ளைபூசணி 15, சர்க்கரை பூசணி 15, கருவேப்பிலை 40, கொத்தமல்லி 15, புதினா 15, காலிபிளவர் 20, பீர்க்கங்காய் 20, முட்டைக்கோஸ் 8, புடலங்காய் 15, பெரிய பாகற்காய் 30, இஞ்சி 100, சிறுகிழங்கு 50. காய்கறி மொத்த வியாபாரி சேதுபதி கூறுகையில், ‘தற்போது பெங்களூரில்

இருந்து முட்டைக்கோஸ் வரத்து அதிகளவில் உள்ளது. கடந்த 2 வாரங்களுக்கு முன்பு கிலோ ரூ.20வரை விற்கப்பட்ட முட்டைக்கோஸ் கிலோ ரூ.8ஆக குறைந்துள்ளது' என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**


**கொங்கணாபுரம் வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் 14ஆயிரம் பருத்தி மூட்டைகள் ரூ.3 கோடிக்கு ஏலம் போனது**



**இடைப்பாடி,**

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தி விற்பனையாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் பருத்தி வரத்து அதிகரித்துள்ளது. நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் சங்கத்திற்கு 14 ஆயிரம் பருத்தி மூட்டைகள் வந்தன. மொத்தம் ரூ.3 கோடிக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. பி.டி. ரக பருத்தி மூட்டைகள் ரூ.4900 முதல் ரூ.5800–க்கு ஏலம் சென்றது. டி.சி.எச்.ரக பருத்தி மூட்டைகள் ரூ.6850 முதல் ரூ.7750–க்கு ஏலம் சென்றது. இதில் வெளியூர் வியாபாரிகள் பலரும் கலந்து கொண்டு ஏலம் எடுத்தனர்.

**பொள்ளாச்சி திப்பம்பட்டியில் ரூ.3¼ கோடியில் இளநீர் வணிக வளாகம் கட்டும் பணி அமைச்சர், துணை சபாநாயகர் தொடங்கி வைத்தனர்.**



**பொள்ளாச்சி,**

பொள்ளாச்சி திப்பம்பட்டியில் ரூ.3¼ கோடி செலவில் இளநீர் வணிக வளாகம் கட்டும் பணியை அமைச்சர் தாமோதரன், துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

ரூ.3¼ கோடி

கோவை மாவட்ட வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் பொள்ளாச்சிஅருகே திப்பம்பட்டியில் உள்ள தென்னை நாற்றுப்பண்ணை வளாகத்தில் ரூ.3கோடியே 25 லட்சத்தில் இளநீர் வணி வளாக கட்டிடம் கட்டப்படு கிறது. இதற்கான கட்டிடப் பணிகள் தொடக்க விழா மற் றும் பூமி பூஜை நேற்று காலை நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட கலெக் டர் அர்ச்சனாபட்நாயக் தலைமை தாங்கினார். வேளாண்மை விற்பனை மற் றும் வேளாண் வணிக துறை இயக்குனர் அனில் மேஷ்ராம் வரவேற்று பேசினார். முன்ன தாக கட்டிட கட்டும் பணிக் கான பூமி பூஜையை துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன், வேளாண்மை துறை அமைச் சர் தாமோதரன் ஆகியோர் தொடங்கி வைத் தனர்.

தொடர்ந்து தமிழ்நாடு அரசு கேபிள் வாரிய தலைவர் உடுமலை ராதாகிருஷ்ணன், எம்.எல்.ஏ.க்கள் முத்துகருப் பண்ணசாமி, சண்முகவேலு, கோவை வேளாண்மை

பல்கலைக்கழக துணை வேந் தர் ராமசாமி, விவசாயிகள் ரத்தினம், சோம சுந்தரம் ஆகி யோர் பேசினார்கள். விழாவில் துணை சபாநாயகர் பொள் ளாச்சி ஜெயராமன் பேசும் போது கூறியதாவது:–

சொட்டுநீர் பாசனம்

தமிழகத்தில் 3–வது முறை யாக பொறுப் பேற்ற முதல்– அமைச் சர் ஜெயலலிதா சட்ட சபை யில் எனது முதல் கோரிக் கையை ஏற்று இளநீர் வணிக வளாக கட்டிடம் கட்ட ரூ.3.25 கோடி நிதி ஒதுக்கி உள்ளார்.

தமிழகத்தில் 2–வது பசுமைப் புரட்சிக்காக கடந்த ஆண்டு வேளாண்மைக்கு ரூ.5189.93 கோடி ஒதுக்கி உள்ளார். மழை அளவு குறைந்து வரும் நிலையில் திருமூர்த்தி அணை, ஆழியார் அணை நீர் பாசனத் தில் இஸ்ரேல் நாட்டு முறையில் சொட்டு நீர் பாசனத்தை ஏற் படுத்த முயற்சி செய்ய வேண் டும்.

இவ்வாறு துணை சபாநாய கர் பொள்ளாச்சி ஜெயராமன் கூறினார்.

இளநீருக்கு தனிச்சுவை

தொடர்ந்து வேளாண்மை துறை அமைச்சர் தாமோதரன் பேசும் போது கூறியதாவது:–

உலக அளவில் தென்னை சாகுபடி செய்யும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 3–வது இடத்தில் உள்ளது. தமிழ் நாட் டில் சுமார் 3.9 லட்சம் ஹெக் டேர் பரப்பளவில் தென்னை சாகுபடி நடை பெற்று வரு கிறது. கோவை மாவட்டத்தில் 87 ஆயிரத்து 937 ஹெக்டே ரி லும், பொள்ளாச்சி தாலுகா வில் அதிகபட்சமாக 54 ஆயி ரத்து 978 ஹெக்டேரில் தென்னை பயிரிடப்பட்டுள் ளன.பொள்ளாச்சி பகுதி இள நீருக்கு தனிச்சுவை உள்ளதால் இதர மாவட்டங்கள், மாநிலங் களில் விரும்பி வாங்கி வருகின் றனர். தென்னை சாகுபடி விவசாயிகளுக்கு அதிக லாபம் பெற்று தரும் நோக்கில் இந்த இளநீர் வணிக வளாகம் தொடங்க முதல்– அமைச்சர் உத்தரவிட்டு உள்ளார். இந்த வணிக வளாகத்தில் ரூ.1.56 கோடியில் பரிவர்த்தனை கூடம், ரூ.90 லட்சத்தில் வணி கர்களுக்கு 10 கடைகள், ரூ.23 லட்சத்தில் அலுவலக கட்டி டம், ரூ.7 லட்சத்தில் வேளாண்மை இடு பொருட் கள் விற்பனை செய்ய 5 கடை கள்

கட்டப்படும். எடைக்கருவி கள், சுகாதார வசதி, ஆழ்குழாய் கிணறு, சுற்றுச்சுவர், கான் கிரீட் சாலை போன்றவைகள் ரூ.49 லட்சத்தில் அமைக் கப் படும்.

குளிர்பதன கிடங்குகள்

பொள்ளாச்சி, உடுமலை, பல்லடம், ஆனைமலை, அவினாசி, தொண்டாமுத்தூர், செஞ்சேரிமலை ஆகிய இடங்களில் 25 மெட்ரிக் டன் அளவு குளிர் பதன கிடங்குகள் கட்டும் பணி முடிவடைந் துள்ளன. கிணத்துக்கடவில் 500 மெட்ரிக்டன் குளிர்பதன கிடங்கு கட்டும் பணி நடை பெற்று வருகிறது.இவ்வாறு அமைச்சர் தாமோதரன் கூறினார்.தொடர்ந்து விவசாயி களுக்கு இடுபொருட்கள், விதைகள், சூரிய சக்தி மின் மோட்டார் உள்பட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டன.இதில் சப்–கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜெகடே, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலை வர் சக்திவேல், ஒன்றியக் குழு தலைவர்கள் செல்வி பத்மினி, உமாமகேஸ் வரி, கஸ்தூரிவாசு, நகராட்சி துணை தலைவர்கள் விஜய குமார், கண்ணாயிரம், திப்பம் பட்டி ஊராட்சி தலை வர் விஜயராணி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ராதா மணி, மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சுப்பிர மணியம், துணை இயக்குனர் முகம்மது இக்பால், தோட்டக் கலை துறை மாவட்ட துணை இயக்குனர் ராமகிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண் டனர். முடிவில் வேளாண்மை இணை இயக்குனர் பிரதாபன் நன்றி கூறினார்.

**தஞ்சையில் இருந்து சென்னைக்கு சரக்குரெயில் மூலம் 1,990 டன் நெல் அரவைக்கு அனுப்பப்பட்டன**



**தஞ்சாவூர்,**

தஞ்சையில் இருந்து சென்னைக்கு சரக்குரெயில் மூலம் 1,990 டன் நெல் அரவைக்கு அனுப்பப்பட்டன.

<u>நெல் கொள்முதல்</u>

தமிழகத்தின் நெற்களஞ்சியம் என காவிரிடெல்டா மாவட்டங்கள் அழைக்கப்படுகின்றன. காவிரிடெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என முப்போகம் நடைபெறுவது வழக்கம். தற்போது சம்பா சாகுபடி அறுவடை பணிகள் நடைபெற்று வருகின்றன.

அறுவடை செய்யப்பட்ட நெல்லை விவசாயிகளிடம் இருந்து வாங்குவதற்காக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட நெல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த நெல் அரவைக்காக பிற மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவது வழக்கம்.

<u>1,990 டன் நெல்</u>

தஞ்சை மாவட்டத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் நேற்றுகாலை லாரியில் ஏற்றப்பட்டு, தஞ்சை ரெயில் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்பு அங்கு நின்ற சரக்கு ரெயிலில் நெல் மூட்டைகள் அனைத்தும் ஏற்றப்பட்டன.

மொத்தம் 42 வேகன்களில் 47 ஆயிரத்து 700 நெல் மூட்டைகள் அடங்கிய 1,990 டன் நெல் ஏற்றப்பட்டன. பின்பு நெல் மூட்டைகள் ஏற்றப்பட்ட இந்த வேகன்கள் தஞ்சையில் இருந்து சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டன.

**கிராம வளர்ச்சி மையத்தை மீனவர்கள்–விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் மத்திய மந்திரி நாராயணசாமி வேண்டுகோள்**



**புதுச்சேரி,**

புதுச்சேரி தேங்காய்த்திட்டு துறைமுகத்தில் அமைக்கப்பட்டுள்ள கிராம வளர்ச்சி மையத்தை மீனவர்கள், விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மத்திய மந்திரி நாராயணசாமி கூறினார்.

<u>கிராம வளர்ச்சி மையம்</u>

கிராமப்புற பகுதிகளில் செயற்கைகோள் மூலம் தகவல் சேவையை பெற, அரசு சாரா நிறுவனத்துடன் இணைந்து இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகம் 22 மாநிலங்களில் உள்ள 456 கிராமங்களில் வளர்ச்சி மையத்தை தொடங்க திட்டமிட்டது. அதன்படி புதுச்சேரி மாநிலத்தில் தேங்காய்திட்டு, மதகடிப்பட்டு, கரியமாணிக்கம் ஆகிய பகுதிகளிலும் ஏனாம், மாகே ஆகிய பகுதிகளிலும் அமைக்கப்பட்டது.

தேங்காய்திட்டு துறைமுகத்தில் அமைக்கப்பட்டுள்ள கிராம வளர்ச்சி மையத்தின் திறப்பு விழா நேற்று நடந்தது. நிகழ்ச்சியில் புதுச்சேரி அரசு சிறப்பு செயலர் சுந்தரவடிவேலு வரவேற்று பேசினார். நிகழ்ச்சிக்கு அமைச்சர்கள் தியாகராஜன், பன்னீர்செல்வம் ஆகியோர் தலைமை தாங்கினார்கள்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழக தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக மத்திய மந்திரி நாராயணசாமி கலந்து

கொண்டு தேங்காய்திட்டு துறைமுகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கிராம வளர்ச்சி மையத்தை திறந்து வைத்தார்.

விழாவில் மத்திய மந்திரி நாராயணசாமி பேசியதாவது:–

<u>மீனவர்கள்–விவசாயிகள்</u>

புதுச்சேரியை சேர்ந்த மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்காக புதுவையில் கிராம வளர்ச்சி மையம் அமைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதையேற்று தற்போது புதுச்சேரி மாநிலத்தில் 5 இடங்களில் கிராம வளர்ச்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மையத்தில் உள்ள ஜி.பி.எஸ். கருவி மூலம் புதுச்சேரி மீனவர்கள் கடலில் எங்கு மீன் வளம் உள்ளது என்பதை சுலபமாக தெரிந்துகொள்ள முடியும். இதனால் மீனவர்களுக்கு அலைச்சல் குறையும், டீசல் சேமிக்கப்படும்.

இதேபோல் விவசாயிகள் தங்கள் நிலத்தின் நீரின் அளவு, மண்ணின் தன்மை போன்றவை குறித்து தெரிந்து கொள்ள முடியும். புதுச்சேரியில் 70 சதவீதம் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் உள்ளனர். எனவே மீனவர்கள் மற்றும் விவசாயிகள் கிராம வளர்ச்சி மையத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

புதுவை மாநிலம் கடற்கரையை ஒட்டியுள்ள பகுதி என்பதால், இயற்கை சீற்றங்கள் குறித்து பொதுமக்கள் அறிவிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு மத்திய மந்திரி நாராயணசாமி பேசினார்.

விழாவில் அரசு அதிகாரிகள், மற்றும் மீனவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குனர் டாக்டர் மேரி சின்ன ராணி நன்றி கூறினார்.

<u>பேட்டி</u>

விழா முடிந்ததுமு இஸ்ரோ தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் நிருபர்களுக்கு பேட்டியளித்தார்.அவர் கூறியதாவது:–

மங்கள்யான், செவ்வாய் கோள் நோக்கி அதன் பாதையில் சரியாக செல்கிறது. மங்கள்யான் அதற்கு வகுக்கப்பட்ட இலக்கை செப்டம்பர் 24 சென்றடையும் என எதிர்பார்க்கிறோம்.

இதையடுத்து பி.எஸ்.எல்.வி. சி–24 ராக்கெட் மூலம் ஐ.ஆர்.ஆர்.என்.எஸ். விண்கலத்தை மார்ச் இறுதி வாரத்தில் அனுப்ப முடிவுசெய்யப்பட்டுள்ளது. அதைத்தொடர்ந்து அதிநவீன ஜி.எஸ்.எல்.வி. மார்க் 3 என்கிற ராக்கெட் விண்வெளிக்கு அனுப்ப உள்ளோம். ராக்கெட் மூலம் மனிதர்களை விண்வெளிக்கும் அனுப்பும் வகையில் மாதிரி அமைத்துள்ளோம்.

இவ்வாறு இஸ்ரோ தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

**நிலக்கோட்டையில் பாரம்பரிய உணவு கண்காட்சி**



**நிலக்கோட்டை,**

திண்டுக்கல் மாவட்டம், நிலககோட்டையில் பாரம்பரிய உணவு கண்காட்சி நடைபெற்றது. ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் பி. யாகப்பன், ஒன்றிய அ.தி.மு.க. செயலாளர் ஆர்.தண்டபாணி ஆகியோர் தலைமை தாங்கினார்கள். பேரூராட்சி தலைவர் சேகர், நகர செயலாளர் எம்.உதயகுமார், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஜோசப் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் செல்வி வரவேற்று பேசினார். கம்பு, சோளம், கேழ்வரகு, தினை, சாமை, காய்கறிகள், கீரை வகைகள் உள்ளிட்ட

பாரம்பரிய உணவுகளால் ஆன பொருட்கள் கண்காட்சியில் வைககப்பட்டு இருந்தது.

**கோட்டூர்-கூழையனூர் இடையே முல்லைப் பெரியாற்றில் பாலம்**

**உப்புக்கோட்டை,**

கோட்டூர்-கூழையனூர் இடையே முல்லைப் பெரியாற்றில் பாலம் அமைக்க ரூ.4½ கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

பாலம் அமைக்க கோரிக்கை

தேனி மாவட்டம், சின்னமனூர் அருகே முல்லைப்பெரியாற்றின் மேற்கு கரையில் கூழையனூர் கிராமமும், கிழக்கு கரையில் கோட்டூர் கிராமம் அமைந்துள்ளது. இந்த 2 கிராமங்களுக்கு இடையில் சுமார் ஆயிரம் ஏக்கர் விவசாயம் நிலம் அமைந்துள்ளது. இரு கிராம மக்களின் விளை நிலங்களும் ஆற்றின் கரைப்பகுதியின் மாறி மாறி அமைந்துள்ளது. இதனால் தங்களது சொந்த நிலங்களுக்கு சென்று வர வேண்டும் என்றால் சுமார் 8 கிலோ மீட்டர் சுற்றி செல்ல வேண்டும்.மேலும் கோட்டூர், தர்மாபுரி, வெங்கடாசலபுரம் உள்ளிட்ட கிழக்கு பகுதியை சேர்ந்த கிராம மக்கள் போடி மற்றும் குச்சனூருக்கு செல்ல வேண்டும் என்றால் உப்புக்கோட்டை விலக்கு அல்லது சின்னமனூர் வழியாக 15 கிலோ மீட்டர் சுற்றி செல்ல வேண்டும் அதே போன்று கூழையனூர், துரைச்சாமிபுரம், பாலார்பட்டி ஆகிய கிராமங்களை சேர்ந்த வருசநாடு, கடமலைக்குண்டு ஆகிய பகுதிகளுக்கு செல்ல வேண்டும் என்றால் உப்புக்கோட்டை விலக்கு வழியாக 18 கிலோ மீட்டர் சுற்றி செல்ல வேண்டும்.

கூடுதல் நிதி ஒதுக்கீடு

இதனை தவிர்க்க முல்லைப்பெரியாற்றில் புதிய பாலம் அமைக்க வேண்டும் என்று 50 ஆண்டுகளுக்கு மேலாக கோரிக்கை விடுத்து வந்தனர். இதனை தொடர்ந்து கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு பாலம் அமைக்க ரூ.1 கோடியே 69 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்காக அப்போது மாவட்ட கலெக்டராக இருந்த

முத்துவீரன் தலைமையில் பூமி பூஜையும் நடத்தப்பட்டது. ஆனால் பணிகள் தொடங்கப்படவில்லை. இதனால் பாலம் அமைக்கும் திட்டம் அப்படியே கிடப்பில் போடப்பட்டது.பாலம் அமைக்க வேண்டும் என்று மக்கள் தொடர்ந்து வலியுறுத்தியதை தொடர்ந்து பாலம் அமைக்க மறு ஆய்வு செய்யப்பட்டது. அதன்படி தமிழ்நாடு அரசு ஒருங்கிணைந்த ஒப்படைவு வருவாய் திட்டத்தின் கீழ் ரூ.2 கோடியே 91 லட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே ஒதுக்கிய நிதியையு சேர்த்து ரூ.4 கோடியே 60 லட்சம் மதிப்பில் புதிய பாலம் அமைக்கும் பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது. புதிய பாலம் அமைத்தவுடன் 20-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் சுற்றி செல்லும் நிலை மாறும். இதனால் இந்த கிராம மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**வேளாண்மை கூட்டுறவு சங்கத்திற்கு புதிய அலுவலக கட்டிடம் அமைச்சர் திறந்து வைத்தார்**



**சோழவந்தான்,**

சோழவந்தான் அருகே கருப்பட்டி, தென்கரை ஆகிய கிராமங்களில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க புதிய அலுவலக கட்டிடத்தை அமைச்சர் செல்லூர் ராஜு திறந்து வைத்தார்.

<u>புதிய கட்டிடம்</u>

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே உள்ள கருப்பட்டி கிராமத்தில் கூட்டுறவு வேளாண்மை தொடக்க கடன் சங்கத்திற்கு ரூ.14 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய அலுவலக கட்டிடம் மற்றும் ரூ.9.96 லட்சத்தில் கட்டப்பட்ட புதிய சேமிப்பு

கிடங்கு ஆகியவற்றின் திறப்பு விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் சுப்பிரமணியன் தலைமை தாங்கினார்.தமிழக அரசின் டில்லி சிறப்பு பிரதிநிதி ஜக்கையன், எம்.எல்.ஏக்கள் கருப்பையா, தமிழரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மண்டல இணைப் பதிவாளர் பழனிவேலு வரவேற்றார். தொடர்ந்து வேளாண்மை கூட்டுறவு சங்க அலுவலகம், சேமிப்பு கிடங்கு ஆகிய இரண்டு கட்டிடங்களையும் கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் ராஜு திறந்து வைத்து தமிழக அரசின் நலத்திட்டங்களை வழங்கினார்.

நலத்திட்ட உதவிகள்

பின்பு மூடுவார்பட்டி, மேட்டுப்பட்டி, கருப்பட்டி, இரும்பாடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பயனாளிகளுக்கு மாடு, பால்பண்ணை, பயிர் ஆகியவற்றிற்கு ரூ.37 லட்சத்து 46 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார். முன்னதாக ரூ.14 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட தென்கரை வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தையும் அமைச்சர் செல்லூர் ராஜு திறந்து வைத்தார்.நிகழ்ச்சியில் மாவட்ட கூட்டுறவு இணைப் பதிவாளர் தனலெட்சுமி, யூனியன் சேர்மன் அன்னக்களஞ்சியம், மாவட்ட கவுன்சிலர் செல்லப்பாண்டி, கூட்டுறவு சங்கத் தலைவர்கள் வீரமாரிபாண்டி, ராமசந்திரன், ராஜேந்திரன், பால்பாண்டி, நாகேஸ்வரி, கன்னையா துணைத் தலைவர் தங்கப்பாண்டி, சங்க செயலாளர்கள் செல்வம், காமு மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். முடிவில் சார்பதிவாளர் மதியரசன் நன்றி கூறினார்.

**கால்நடை மருத்துவமனைகளில் வைக்கோல் விற்பனை கலெக்டர் ராஜாராமன் ஆய்வு**



சிவகங்கை மாவட்டத்தில் 4 கால்நடை மருத்துவ மனை களில் வைக்கோல் விற்பனை செய்யப் படு கிறது. இதனை கலெக் டர் ராஜாராமன் ஆய்வு செய்தார்.

வைக்கோல் விற்பனை

சிவகங்கை மாவட்டத்தில் கால்நடைகளுக்கு ஏற்படும் தீவன பற்றாக்குறையை போக்கு வதற்காக சிவகங்கை, காளையார்கோவில், திருப்பத்தூர்,தேவகோட்டை ஆகிய 4 ஊர்களில் உள்ள கால்நடை ஆஸ்பத்திரிகளில் வைக்கோல்விற்பனை செய்யப்படுகிறது.

இதையொட்டி சிவகங்கை மற்றும் திருப்பத்தூரில் உள்ள கால்நடை மருத்துவமனை களில் வைக்கோல் விற்பனை செய்யப்படுவதை கலெக்டர் ராஜாராமன் நேரில் பார்வை யிட்டு ஆய்வு செய்தார். அப் போது அவர் வைக்கோல் வாங்க வந்தவர்களிடம் உரிய அட்டையில் பதிவு செய்யப்படு கிறதா? என்று கேட்டறிந்தார். மேலும் வைக்கோல்விற்பனை செய்வதில் புகார்களுக்குஇடம் அளிக்காமல் விற்பனை செய் யும் படி அலுவலர்களை கேட்டு கொண்டார்.

ரூ.10லட்சத்திற்கு கொள்முதல்

பின்னர் கலெக்டர் ராஜா ராமன் நிருபர்களிடம் கூறிய தா வது:-

கால்நடைகளுக்கு தேவை யான உலர்தீவன பற்றாக் குறையை போக்குவதற்காக அரசு விதைப்பண்ணைகளில் இருந்து வைக்கோல் கொள் முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. மாவட்டத் தில் உள்ள 4 விற்பனை மையத் திலும் ஒரு மையத்திற்கு தலா ரூ.10 லட்சம் வரை வைக்கோல் கொள்முதல் செய்யலாம்.

கொள்முதல் செய்யப்பட்ட வைக்கோல் விற்ப¬ னயானதும், அந்த தொகையை கொண்டு மீண்டும் வைக்கோல் வாங்கி விற்பனை செய்யப்படும். ஒரு கிலோ வைகோல் ரூ.2 வீதம் வழங்கப்படும்.

அடையாள அட்டை

இதற்காக அடையாள அட்டை ஒன்று கொடுக்கப் படும். கால்நடை வைத்திருப்ப வர் கள் தங்கள் பகுதிகளில் உள்ள விற்பனை நிலையங் களுக்கு சென்று அட்டையில் பதிவு செய்து வைக்கோலை பெற்றுகொள்ளலாம். ஒவ் வொரு முறையும் வைக்கோல் வாங்குவதற்கு வரும்போது, தவறாமல் அட்டையை கொண்டு வந்து அதில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். கலெக்டருடன் கால்நடை பராமரிப்பு துறை இணை இயக் குனர் நாகராஜன், உதவி இயக்குனர்கள் பாலச்சந்தின், கருணாகரன், சோமசுந்தரம் மற்றும் கால்நடை டாக்டர்கள் உடன் இருந்தனர்.

**பாம்பன் மீனவர்களின் வலையில் சிக்கிய 17 கிலோ அபூர்வ சூரியன் மீன்**



ராமேசுவரம் அருகே பாம்பன் தெற்கு கடற்கரையிலிருந்து நேற்று முன்தினம் ராபின் என்பவருக்கு சொந்தமான நாட்டுப் படகில் ஜாய்சன், ரதிபன், ஜாக்சன், அந்தோணி, கிங்ஸ்டன், செல்வராஜ் ஆகிய 6 மீனவர்களும் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் மீன் பிடிக்கச் சென்றனர். நேற்று அதிகாலை பாம்பன் குந்துகால் கடல் பகுதியில் மீன்பிடித்த போது வலையில் அபூர்வ வட்ட வடிவிலான மீன் ஒன்று சிக்கியது. அந்த மீனை நேற்று காலை கரைக்கு கொண்டு வந்தனர். இந்த மீனை ஏராளமான மீனவர்கள் ஆச்சர்யத்துடன் பார்த்து சென்றனர். இந்த மீனை வியாபாரி ஒருவர் விலைக்கு வாங்கி கேரளாவிற்கு அனுப்பி வைத்தார்.

அந்த மீன் பற்றி மீனவர் ஒருவர் கூறுகையில், மீனவர்களின் வலையில் சிக்கியுள்ள வட்ட வடிவிலான சூரியன் மீன் என்று அழைக்கப் படுகிறது. மீனின் எடை 17

கிலோவாக இருந்தது. சூரியன் மீனை கடலில் பார்ப்பதே மிகவும் அபூர்வமாகும். வால் பகுதி இல்லாமல் பறவைகளின் சிறகுகள் போன்று சூரியன் மீனின் இரண்டு பகுதியிலும் துடுப்புகள் உள்ளன. கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு பாம்பன் சின்னப்பாலம் பகுதியில் ஒரு மீனவரின் வலையில் இதே போன்ற சூரியன் மீன் சிக்கியது' என்றார்.

**தடுப்பணை கட்ட அடிக்கல் நாட்டு விழா**



**விளாத்திகுளம்,**

விளாத்திகுளம் அருகே உள்ள வைப்பாற்றில் ரூ.14¾ கோடி மதிப்பில் தடுப்பணை கட்ட அடிக்கல் நாட்டு விழா நடந்தது. மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி அடிக்கல் நாட்டினார்.

விளாத்திகுளம் தாசில்தார் செல்லப்பாண்டி, வைப்பார் பஞ்சாயத்து தலைவர் செண்பகபெருமாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில், விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர் ரூபம் வேலவன், துணை தலைவர் சோலையப்பன், ஆற்றங்கரை பஞ்சாயத்து தலைவர் சீதாராமன், எம்.ஜி.ஆர். இளைஞர் அணி ஒன்றிய இணை செயலாளர் ரகுபதி, உதவி செயற்பொறியாளர் கணேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பாம்பன் மீனவர் வலையில் சிக்கிய அரிய வகை சூரிய மீன்



பாம்பன் நாட்டுப்படகு மீனவர் வலையில் அரிய வகை சூரிய மீன் சிக்கியது. இதனை அப்பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துச் சென்றனர்.

பாம்பன் கலங்கரை விளக்கம் பகுதியைச் சார்ந்தவர் ராபின் என்பவரின் படகில் நான்கு மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் சனிக்கிழமை இரவு சென்றனர். இதில் அரிய வகை மீனான சூரிய மீன் ஒன்று சிக்கயது. அது சுமார் 18 கிலோ எடையும், 3அடி நீளமும், 4 அடி உயரமும் உடையதாகவும் இருந்தது. மீனின் வால் பகுதியான துடுப்பு பகுதி உருமாறியிருந்ததால் இந்த மீனை பாம்பன் மக்கள் ஞாயிற்றுக்கிழமை ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

இந்த மீனைப் பற்றி மரைக்காயர் பட்டிணத்தில் உள்ள மத்திய மீன் ஆராய்ச்சித்துறை ஆராய்ச்சியாளர்கள் கூறியதாவது, இந்த மீன் அரிய வகை மீனின் பெயர் சன் பிஷ் (Sun Fish) ஆகும்.

இந்த அதிகப்பட்சம் 8அடி நீளமும், 2, 500 கிலோ எடை வரையிலும் இது வளரும் தன்மை கொண்டது. இந்த சூரிய மீன் நண்டு, சிப்பிகள், ஜெல்லி மீன்கள், இறால்

ஆகியவற்றை விரும்பி உண்ணும். இந்த மீனின் துடுப்பு பகுதி மட்டும் உருமாறிக் காணப்படும்.

இந்த வகை சூரிய மீன்கள் அமெரிக்கா, கனடா, கொலம்பியா, அர்ஜென்டினா, சிலி, பெரு ஆகிய நாடுகளின் கடல் பகுதியில் அதிகமாக காணப்படும். ராமேஸ்வரம் கடல் பகுதியில் காணப்படுவது மிகவும் அரிதாகும்.

250 மீட்டர் முதல் 500 மீட்டர் ஆழத்தில் வாழக் கூடிய சூரிய மீன்கள் ஒருநாளைக்கு சராசரியாக 25 கிலோ மீட்டர் தூரம் வரையிலும் நீந்தக்கூடியது ஆகும். மேலும் இந்த மீன் ஒரே நேரத்தில் 3 கோடி முட்டைகள் வரையிலும் இடும். பொதுவாக இந்த வகை மீனை மக்கள் விரும்பி சாப்பிடுவது கிடையாது, என தெரிவித்தனர்.